## உள்ளே உள்ளவை !


| | | |
|---|---|---|
| 1. | பொறுமையின் உயர்வு | 5 |
| 2. | பொறுமையின் அந்தரங்கம் | 11 |
| 3. | பொறுமை ஈமானில் பாதி | 27 |
| 4. | எதில் பொறுமை ? | 29 |
| 5. | பொறுமையின் பிரிவுகள் | 33 |
| 6. | பொறுமையின் தேவை | 43 |
| 7. | விரும்பாதது நடந்தால் ....! | 48 |
| 8. | மனிதனால் தடுக்க முடியாதவை | 54 |
| 9. | பழிக்குப் பழி ! | 61 |
| 10. | வியாதிக்கு மருந்து | 65 |


# பொறுமையாய் இரு!

## 1. பொறுமையின் உயர்வு

"பாவ மன்னிப்பு" என்ற நூலில் நான் விவரித்தவற்றை இதுவரை நீ மறந்திருக்க மாட்டாய் என்றே எண்ணுகிறேன். அதன் இறுதியில் பாவத்தைத் தொடர்ந்து செய்யும் மனப் பான்மையைப் பற்றி ஓரளவு ஆராய்ந்தோம்.

இத்தகைய மனப்பான்மை பெரும்பாலோருக்கு உண்டு. இது ஒரு கொடிய வியாதி. மிகக் கொடிய வியாதி. இதர வியாதிகளைப் போல் இவ்வியாதியை சாதாரண வைத்தியர் களால் அகற்ற முடியாது. இதை வேரோடு அறுத்தெறியத் தனித்திறனும், பிரத்தியேக ஞானமும் வேண்டும்.

இந்த வியாதி சாதாரணமாக எல்லோரையும் பீடித்தி ருக்கிறது. பாமரன் முதல் அறிஞன் வரை, ஏழை முதல் பணக்காரன் வரை அனைவரும் இதன் கொடிய பசிக்கு இரையாகி வருகிறார்கள். இவ்வியாதி நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகிறது.

இதை எப்படி அழிப்பது? இதற்கு ஏதேனும் மார்க்க முண்டா?

உண்டு! எல்லா வியாதிகளையும் போல இவ்வியாதி யையும் அகற்றலாம். இதற்கும் மருந்து உண்டு. அந்த மருந்தில் இரண்டு மூலிகைகள் கலந்திருக்கின்றன. ஒன்று ஞானம் எனும் இனிப்பான மூலிகை; மற்றொன்று, பொறுமை

எனும் கசப்பான மூலிகை. இவ்விரு மூலிகைகளாலும் தயாரிக்கப்பட்ட கூட்டுப் பொருளினால் தான் மேற்குறிப் பிட்ட வியாதியை அகற்ற முடியும்.

இனிப்பான மூலிகை : இதைப் பற்றிப் ''பாவமன்னிப்பி''ன் இறுதியிலேயே ஓரளவு விளக்கம் தந்து விட்டேன். அது உன் முன்னேற்றத்திற்குப் போதும் என்பதே என் எண்ணம்.

எனவே, இப்போது இந்நூலில் பொறுமை என்னும் கசப்பான மூலிகையைப் பற்றி ஆராய்வோம். பொறுமை என்றால் என்ன? அதன் பிரிவுகள் எத்தனை? பொறுமையைப் பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது? பொறுமையாளர்களின் மத அந்தஸ்து என்ன? பொறுமையைப் பற்றிக் குர்ஆன் கூறுவது யாது? திருநபி (ஸல்) அவர்களின் கருத்து என்ன ?என்பன போன்றவற்றைத் தொடர்ந்து ஆராய்வோம்.

எல்லாவற்றிற்கும் முதலில் குர்ஆனை எடுத்துக் கொள்வோம். அது பொறுமையைப் பற்றியும், பொறுமை யாளர்களைப் பற்றியும் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

எல்லாம் வல்ல இறைவன் பொறுமையாளர்களைப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் அழைக்கிறான். குர்ஆனில் எழுபதுக்கு மேற்பட்ட இடங்களில் பொறுமையின் சிறப்புக் காணக் கிடக்கிறது.

இறைவன் கூறுகிறான்: ''அந்தச் சமூகத்தவரில் சிலரை நாம் உண்டாக்கினோம். அவர்கள் பொறுமையை மேற் கொண்டு, எமது கட்டளைக்கு அடி பணிந்து, நேர் வழியடைந்தார்கள்.''

இன்னும் சொல்கிறான் : ''இஸ்ரவேலர்கள் பொறுமை யைக் கைக்கொண்டதால் அவர்களை இறைவன் நல்ல முறையில் நடத்தினான்.''



மீண்டும் கூறுகிறான் : ''பொறுமையாளர்களுக்கு அவர் கள் செய்ததை விட அதிகமான நன்மை அளிக்கப்படும்''.

இன்னும் நவில்கிறான் : ''பொறுமையாளர்களுக்கு அளவற்ற ஊதியம் உண்டு.''

இன்னுமோரிடத்தில் அருள்கிறான் : ''அவர்கள் பொறு மையோடு செயலாற்றியதால் அவர்களுக்கு இரட்டைக் கூலி அளிக்கப்படுகிறது.''

இன்னும் இவை போன்று அனேக திரு வசனங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் ஒன்று சேர இங்கு விவரிப்பது சாத்தியமில்லை.

இப்போது நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் கருத்தை ஆராய்வோம்.

நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''பொறுமை ஈமானில் பாதி''.

பொறுமை எப்படி ஈமானில் பாதியாகும் என்பதை பின்னர் ஆராய்வோம்.

இன்னும் எம் பெருமானார் கூறினார்கள்.

''உங்களுக்கு இறைவன் எத்தனையோ அருட் கொடை களை வாரி வழங்கியிருக்கலாம். ஆனால் அவற்றிலெல்லாம் மிகவும் அரிதாகக் கிடைப்பது இரண்டு: ஒன்று திட நம்பிக் கை: மற்றொன்று, பொறுமை. பொறுமையைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் தங்களுக்குத் தவறிப் போன இரவு வணக்கத்தைப் பற்றியோ, நோன்புகளைப் பற்றியோ கவலைப்பட வேண்டியதில்லை. நிலைமையை உணர்ந்து பொறுமையோடு செயலாற்றுவது மற்ற எல்லாக் காரியங் களையும் விடச் சிறந்ததாகும்''.

திரு நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார் : ''ஈமான் என்றால் என்ன?''

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பதிலிறுத் தார்கள் : ''பொறுமையும், வீரமும்''.

நபி தாவூத் (அலை) அவர்களுக்கு இறைவன் ஓர் அறிக்கை விடுத்தான்: ''தாவூத், என்னுடைய சிறப்பியல்பு களை நீர் உண்டாக்கிக் கொள்ளும். என்னுடைய இயல்பு களில் ஒன்று தான் பொறுமையும்''.

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் 'அன்ஸார்' களைக் காண நேர்ந்தது.

''நீங்கள் எல்லோரும் மூஃமின்கள் தாமே?'' என்று நபியவர்கள் கேட்டார்கள்.

இஸ்லாத்தின் வரம்பு மீறாமல் நடந்து வந்த அன்ஸார் கள் திகைத்தார்கள்: மௌனம் சாதித்தார்கள். எதிர் பாராத இக்கேள்வி அவர்களை ஊமைகளாக்கி விட்டது.

''ஆமாம், நாங்கள் எல்லோரும் மூஃமின்கள் தாம்'' என் றார்கள் அன்ஸார்களுடனிருந்த உமர் (ரலி) அவர்கள்.

''அப்படியானால் அதற்கு அடையாளம் என்ன?'' இது இரண்டாவது கேள்வி.

அன்ஸார்கள் பதிலிறுத்தார்கள். ''இறைவனின் அரு ளுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். பிணியின் போது பொறுமையைக் கையாள்கிறோம்.''

இவற்றை எல்லாம் பார்க்கும் போது பொறுமையின் பெருமை நன்றாகத் தெரிகிறதல்லவா?

நபி ஈஸா (அலை) அவர்கள் கூறினார்கள் :

''நீங்கள் சிலவற்றை விரும்புகிறீர்கள்; வேறு சில வற்றை வெறுக்கிறீர்கள். நீங்கள் விரும்பாதவை நிகழும்



போது பொறுத்துக் கொண்டால் தான் உங்களால் உங்கள் விருப்பத்தை அடைய முடியும்.''

உங்கள் மனம் வெறுப்பவற்றைப் பொறுத்துக் கொள் வதில் அதிகமான நன்மையுண்டு'' என்று நபிகள் திலகம் (ஸல்) கூறியிருக்கிறார்கள்.

பொறுமை குறித்து அருளப்பட்ட நபி (ஸல்) கருத்தும் அதிகமாகவே இருக்கிறது. அவற்றை எல்லாம் இங்கு எழுது வது சாத்தியமில்லை.

இதுவரை குர்ஆனையும் ஹதீதையும் பார்த்தோ மல்லவா? இப்போது பெரியோர்களின், மார்க்க மேதைகளின் கருத்துக்களைப் பார்ப்போம்.

ஹலரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் அபூமூஸா அஷ்அரீ அவர்களுக்கு ஒரு கடிதம் வரைந்தார்கள். அதில் அடியிற் கண்ட சில வரிகளை முக்கியமாகக் குறிப்பிட்டிருந் தார்கள்.

''அபூமூஸா, நீர் பொறுமையைப் பற்றிக் கொள்ளும்.

ஏனெனில் பொறுமை தான் ஈமானின் கனி''

ஹலரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்:

''ஈமான் என்ற மண்டபத்துக்கு நான்கு தூண்கள்: திட நம்பிக்கை, பொறுமை, மார்க்கப் போர், நியாயம்.''

இன்னும் கூறினார்கள்:

''உடலுக்குத் தலை எப்படியோ, ஈமானுக்குப் பொறுமை அப்படி. தலையற்ற உடலால் பயனில்லை. இதே போன்று பொறுமையற்ற ஈமானால் பயனேற்படாது''.

இதுவரை நான் விவரித்து வந்தவற்றை நீ உள்ளத்தில் பதித்துக் கொள். இவற்றிலிருந்து பொறுமையின் பெருமையை

ஓரளவேனும் உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன். ஆனால் இதுவரை நாம் ஆராய்ந்ததெல்லாம் மதவியலின் படி தான். இனி மேல் பொறுமையின் சிறப்பை அறிவியலாக ஆராய்வோம்.

பொறுமையின் சிறப்பை அறிய வேண்டுமாயின், அதற்கு முன்னர் பொறுமையைப் பற்றி அறிய வேண்டும். எனவே, பொறுமை என்றால் என்ன? அதன் அந்தரங்கம் என்ன? என்று முதலில் ஆராய்வோம். அதன் பிறகு படிப்படியாகச் சகல விஷயங்களையும் ஆராய்வோம்.

## 2. பொறுமையின் அந்தரங்கம்

பொறுமையே மனிதனுக்குத் தனிச சிறப்பை அளிக்கிறது. அந்தப் பொறுமையின் காரணமாகத் தான் அவன் அமரர்களை விட்டும், மிருகங்களை விட்டும் தனித்து நிற்கிறான். ஏனெனில், மிருகங்களிடம் பொறுமை இல்லாதது போல், அமரர்களிடமும் பொறுமை கிடையாது.

மிருகங்கள் மனிதனை விடத் தாழ்ந்தவை. அவற்றின் மீது அதிகாரம் செலுத்துவது இச்சை; ஆசை. எனவே, அவை எது செய்தாலும் ஆசையின் அடிப்படையில் - இச்சையின் அஸ்திவாரத்தில் தான் செய்கின்றன. அவை ஓடுவது, நடப்பது, பாய்வது, கீறிக் கிழிப்பது, தின்பது, குடிப்பது, புணர்வது, உறங்குவது முதலிய சகல காரியங்களுக்கும் இச்சையே மூல காரணமாக அமைகிறது. அதே சமயத்தில் இந்த இச்சையை அடக்கியாண்டு, அதன் நோக்கத்தைத் தடை செய்யும் ஆற்றலும் அவைகளிடம் கிடையாது. அந்த ஆற்றலைத் தானே நாம் பொறுமை என்று குறிப்பிடுகிறோம்.

இதிலிருந்து மிருகங்களிடம் பொறுமைக் குணம் கிடையாது என்று உணர்ந்து கொண்டாயல்லவா?

இப்போது அமரர்களின் விஷயத்திற்கு வருவோம். அமரர்களிடம் ஏன் பொறுமை இல்லாமற் போய்விட்டது என்று பார்ப்போம்.

அமரர்கள் மிருகங்களுக்கு நேர் எதிரானவர்கள். மிருகங்கள் மனிதனை விடத் தாழ்ந்தவை. எனவே, அவைகளுக்கும் பொறுமைக் குணத்தைப் பெறும் பேறு கிடைக்கவில்லை.

அமரர்கள் மனிதனை விட ஒரு வகையில் உயர்ந்தவர்கள். எனவே பொறுமைக் குணம் பெற்றிருக்க வேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

அமரர்கள் இறை வணக்கத்திற்காகவே தனித்து வாழ்ப வர்கள். அவர்களது குறிக்கோள் இறை வணக்கம் தான். அதிலேயே அவர்கள் இன்பமடைந்து அடி பணிவார்கள். அதே சமயத்தில் அவர்களிடம் தவறான இச்சையோ, காம உணர்ச்சியோ மருந்துக்கும் கிடையாது. எனவே அந்த இச்சையை- காம உணர்ச்சியை அடக்கியாண்டு பொறுமை யை மேற்கொள்ள வேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

ஆனால் மனிதனின் நிலைமை வேறு. அவனை மிருக இனத்திலும் சேர்க்க முடியாது. அமர வகையிலும் இணைக்க முடியாது. அவனிடம் இச்சை, காமம் எல்லாமுண்டு. அதே சமயத்தில் அவற்றை அடித்து விரட்டும் பேராற்றலும் உண்டு.

மனிதன் பிறக்கும் போது ஏறக்குறைய மிருகத்தையே ஒத்திருக்கிறான். அப்போது அவனுக்குப் பசி - உணவாசை மட்டுமே இருந்தது. அதைத் தட்டிக் கழிக்கத் தெரியாது. அவனுக்குப் பசி வயிற்றை கிள்ளும் போது அழுவான். அவனுக்கு வேண்டியது எல்லாம் பால் தான். அது தான் அவன் ஆசை; விருப்பம்.

பின்னர், அவன் வளர்கிறான். பாலப் பிராயத்தை உதறித் தள்ளி விட்டுச் 'சிறுவன்' என்ற பட்டத்தைப் பெறுகிறான். அப்போது அவனுடைய இளம் உள்ளத்தில் புதியதொரு ஆசை உதயமாகிறது; அது தான் விளையாட்டு ஆசை.

இந்த ஆசைக்கொப்ப அவன் விளையாடுவான். ஆடி, ஓடி, விளையாடிப் பொழுதைப் போக்குவான்.



இதற்கடுத்தது உடையாசை. இதன் படி கவர்ச்சிகரமாக உடையணிவான்.

அதன் பிறகு விவாக விருப்பம்....

இப்படியே ஒன்றன் பின் ஒன்றாகப் பலதரப்பட்ட ஆவல்கள் உற்பத்தியாகின்றன.

ஆனால், அவற்றை அடக்கி, பொறுமையை மேற் கொள்ளும் மனப்பான்மை அவனிடம் கிடையாது.

அவன் சிறுவனாயிருந்த போது ஆசை- இச்சை மட்டுமே இருந்தது. இந்த முறையில் பார்க்கும் போது, அவனுக்கும் மிருகத்திற்கும் இடையில் அதிக வித்தியாசம் காண முடியாது.

ஆனால் மக்களுக்கு அருள் பாலித்து அன்பைச் சொரியும் இறைவன் அவ்வளவு தூரத்திற்கு விட்டு விட வில்லை. ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினரை அவன் சிறப்பித்திருக்கிறான். மிருகத்தின் தட்டை விட்டு மனிதனை உயர்த்தி விட்டான் அவன்.

சிறுவன் வளர்ந்து வாலிபத்தை நெருங்கும் போது இறைவன் இரு அமரர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கிறான். அதன் படி அவர்களில் ஒருவர் அவனுக்கு நல்லதைக் கூறுவார்; நேர் வழி காட்டுவார். மற்றவர் அதை உறுதிப்படுத்துவார். இவ்விரு அமரர்களின் உதவியால் அவன் மிருகங்களை விட்டுயர்ந்து தனிச் சிறப்பெய்துகிறான். அது மட்டுமல்ல, மிருகங்களிடமில்லாத தனித்தன்மைகள் இரண்டையும் பெறுகிறான்.

முதல் தன்மை வல்ல நாயனையும் அவனை அறிமுகப் படுத்திய திருத்தூதரையும், மறுமை வாழ்க்கைக்குப் பயன்படுபவற்றையும் அறியும் தன்மை. இத்தன்மை முதல்

அமரரின் - நேர் வழி காட்டும் அமரரின் உதவியால் உண்டாகிறது.

இந்தச் சிறப்பம்சம் மிருகங்களிடம் கிடையாது என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அது உனக்குத் தெரியும்.

மிருகங்கள் தங்கள் நாயனை உணரப் போவதில்லை. அவைகளிடம் எவ்வித அறிவும் கிடையாது. மறுமை வாழ்க்கைக்குரிய எதையும் அவைகள் தேடித் திரிவதில்லை. அவைகளின் இச்சையில் பட்டது தான் அவைகளின் குறிக்கோள். எனவே தான் அவைகள் இன்பத்தை நாடி விரைகின்றன. அவை உண்மையில் இன்பமாக இல்லாவிட்டாலும், இன்பம் தருபவை- பயன் படுபவை என்று தோன்றினால் போதும்! உடனே பாய்ந்து விடும். இதனால் தான் கொடிய மிருகங்களை எல்லாம் பிடிப்பது சாத்தியமாகிறது.

மனிதன் தெளிந்த அறிவையும் நேர் வழியையும் அடையும் போது மனோ இச்சைக்கு வழிபடுவது தன்னைத் தானே படுகுழியில் வீழ்த்திக் கொள்வதற்கு ஒப்பாகும் என்று உணர்கிறான். இச்சைக்கு இடம் கொடுப்பது மறுமை வாழ்க்கைக்கு உலை வைப்பதாகும் என்று உணர்கிறான்.

ஆனால் இந்த நல்லுணர்வு மட்டும் போதாது, இந்த அறிவினால் மட்டும் அவன் நேரிய பாதையில் நடக்க ஆரம்பித்து விடுவான் என்று சொல்ல முடியாது. தீங்கானவை அனைத்தையும் விட்டு விலகும் அளவிற்கு அவன் மனம் வன்மை பெற வேண்டும். ஏனெனில், எத்தனையோ பேர் தீங்கு ஏற்படும் என்று தெரிந்தும் தின்மையைச் செய்கி றார்கள். தங்களையே கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களிடம் கிடையாது.

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்து விட்டால் மட்டும் போதாது



என்று உணர்கிறாயல்லவா? எனவே, தின்மையை ஒதுக்கி நன்மையை எடுத்து நடக்கும் மனோ உறுதியும் வேண்டும் என்பது தெளிவு.

இந்தச் சமயத்தில் தான் இரண்டாவது அமரர் பயன்படுகிறார். அவரது உதவியால் மனிதன் போதிய மனோ உறுதியைப் பெறுகிறான். இது தான் இரண்டாவது தன்மை. இத்தன்மை மிருகங்களிடம் மருந்துக்கும் கிடையாது.

இந்த அமரர் நன்மையானவற்றைப் பலப்படுத்தி அதை எடுத்து நடக்கத் தூண்டுவார். காமத்திற்கும் அறிவிற்கு மிடையில் நிகழும் கோர யுத்தத்தில் அவர் அறிவின் பக்கம் நின்று போராடுவார். சில வேளைகளில் அறிவு தோல்வி யடைவதும் சில வேளைகளில் வெற்றி அடைவதும் இயல்பு. இறைவன் சிலருக்கு மகத்தான அறிவுப் பலத்தையும் வேறு சிலருக்குச் சாதாரண அறிவுப் பலத்தையும் அருள்கிறான். காம உணர்ச்சியோடு போராடும் இந்த அறிவு -நேர்வழிச் சுடர், பலதரப்பட்ட அளவுகளாகப் பிரிகிறது. ஒரு மனிதனின் நேர்வழியுணர்விற்கும், மற்றொரு மனிதனின் நேர் வழியுணர் விற்கும் இடையில் பாரதூரமான வித்தியாசம் காணப் படுகிறது. எனவே அவற்றை யெல்லாம் இங்கு விவரிப்பது சாத்தியமல்ல.

காம உணர்ச்சியை அடக்கியாண்டு மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையில் பாகுபாடு செய்யும் அந்தத் தன்மைக்கு 'மத உணர்ச்சி' என்று பெயரிடலாம். அதற்கெ திராக இயங்கும் மிருக உணர்ச்சிக்குக் 'காம உணர்ச்சி' என்று பெயரிடலாம். சில வேளைகளில் இவ்விரு சைனியங்களுக் குமிடையில் கொடிய யுத்தம் நிகழ்வதுண்டு. மனிதனின் உள்ளம் தான் அப்போது யுத்த களமாக அமையும். இந்தச் சமயத்தில் காம உணர்ச்சியை மத உணர்ச்சியால் தோற் கடிப்பது தான் பொறுமை. இவ்வாறு ஒருவன் காம உணர்ச் சியை அடக்கியாண்டு அதிலேயே அவன் நிரந்தரமாக

நின்றால் அவன் பொறுமையாளனாக மாறிவிடுகிறான். இறைவனின் புகழுரைகளுக்கும், நபிமணியின் பாராட்டுரைகளுக்கும் அவன் உரியவனாகிறான். இதற்கு மாறாக அவனுடைய மத உணர்ச்சி காம உணர்ச்சியிடம் தோல்வியடைந்து விட்டால் அவன் பெறுமையாளர்களின் எல்லையை விட்டு விலகுகிறான்.

மத உணர்ச்சி வலுவேறும் போது அவனுடைய உள்ளத்தில் அறிவொளி பிரகாசிக்கும். அப்போது அவன் காம உணர்ச்சிக்குக் கட்டுப்படுவது பெரும் தவறு என்று உணர்வான். இந்த உணர்ச்சி திடம் பெறும் போது அவன் 'தீய உணர்ச்சி கொடிய விரோதி என்ற முடிவிற்கு வருவான்.

இந்த எல்லையை ஒருவன் அடைந்துவிட்டால் போதும். காம உணர்ச்சிக்கு எதிராக அவன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

மேற்குறிப்பிட்ட படிப்படியான விஷயங்களில் மறைமுகமாக ஊக்குவித்துச் செயலாற்றச் செய்வது மேற்குறிப்பிட்ட இரு அமரர்களின் பொறுப்பு, அவர்களது வேலையும் அதுதான்; அதற்காகவே அவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் நேர்வழி காட்டுபவர்; நல்லறிவை உண்டாக்குபவர். மற்றவர் அந்த அறிவைத் திடப்படுத்திச் செயலாற்றத் தூண்டுபவர். இவர்களில் முந்தியவர் பிந்தியவரைவிட உயர்ந்தவர் என்பது தெளிவு. ஏனெனில் இருளில் ஒளியைக் காட்டுவது அவருடைய பொறுப்பல்லவா? எனவே, அவர் மானிடனின் வலப்புறத்தில் நின்று செயலாற்றுவார். மற்றவர் தம்பதவிக்குத் தக்கவாறு இடப்புறத்தில் நின்று செயலாற்றுவார்.

இப்போது அவர்களின் இதரப் பொறுப்புக்கள் யாவை என்று பார்ப்போம்.



மனிதனுக்கு, வலப்புற அமரர் ஏதேனும் நல்வழியொன்றைக் காட்டுவதாக வைத்துக் கொள். அப்போது அந்த மனிதன் எதனாலோ அதைப் புறக்கணிப்பான். அப்போது அந்த அமரர் அவனுடைய செயலில் ஒரு தின்மையை எழுதுவார். பின்னர் அவன் தன் தவற்றை உணர்ந்து அமரர் காட்டிய பாதையைப் பின்பற்றத்திட்டம் பூணுவான். அப்போது அமரர் அவனது செயலில் ஒரு நன்மையை எழுதுவார்.

இதேபோன்று இடப்புற அமரர் நல்லறிவைப் பலப்படுத்தும் போது அவன் வெறுப்படைவான். அப்போது அவர் ஒரு தின்மையை எழுதுவார். பின்னர் அவன் உண்மையை உணர்ந்து செயலாற்ற முற்படும் போது அவர் ஒரு நன்மையை எழுதுவார்.

இதிலிருந்து சாதாரண எண்ணத்திற்கும் நன்மை தின்மை இருப்பதாக எண்ணிவிடாதே. ஒரு எண்ணத்தைச் செயலாற்றும் போது தான் அதற்குரிய நன்மை அல்லது தின்மை கணக்கிடப்படுகிறது. இதை நினைவில் வைத்துக் கொள்.

இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன்.

அமரர்கள் எழுதுவதாக நான் குறிப்பிட்டதும் அவர்கள் சாதாரணப் பேனாவையும், காகிதத்தையும் உபயோகிப்பதாக எண்ணி விடாதே. அவர்கள் எழுதுவது சாதாரணக் காகிதத்தில்லல: எழுதுகோலையும் உபயோகிப்பதில்லை. அவர்கள் என்ன மனிதர்களா, அப்படி உபயோகிக்க? அவர்கள் இரகசியமான ஏட்டில் வரைவார்கள். அதை இவ்வுலகிலுள்ள எந்த மனிதனாலும் அறிய முடியாது. அவர்களால் எழுதப்பட்ட காகிதங்கள் அவர்கள் உபயோகித்த எழுதுகோல், மை முதலியயாவும் இவ்வுலகிற்கு முழுக்க முழுக்க மாறுபட்டிருக்கும். இவ்வுலகிலுள்ள எந்தப் பொருளையும் அவர்கள் உபயோகிக்க மாட்டார்கள். எனவே, அவர்களால் எழுதப்பட்டுச் சுருட்டி

வைக்கப்பட்ட அந்தச் செய்திச் சுருளை அறியும் பேறு இம்மாநிலத்தில் யாருக்கும் கிடையாது. ஏனெனில், அமர உலகில் சம்பந்தப்பட்ட எந்தப் பொருளையும் இவ்வுலகில் உள்ள யாராலும் அறிய முடியாது.

பின்னர், அந்தச் செய்திச் சுருள் இரண்டு வேளைகளில் பிரித்துக் காட்டப்படும்.

முதல் வேளை, மரண வேளை : இந்த வேளையில் மனிதன் தனியாகக் கிடப்பான். அவனுடைய உற்றார் உறவினர் யாரும் அவனுக்கருகிலிருக்க மாட்டார்கள். அப்படியே இருந்தாலும் அவர்களால் அவனுக்கு எவ்வித நன்மையையும் செய்ய முடியாது.

அப்போது அவன் செய்து வந்த கொடிய செயல்கள் யாவும் திறந்து காட்டப்படும். அவற்றை அவன் பயத்தோடும், ஆச்சரியத்தோடும் பார்ப்பான். திகிலும் பீதியும் அவன் உள்ளத்தை அடைக்க அவன் மௌனம் சாதிப்பான்.

''நாம் உங்களை எல்லாம் தனியாகவே படைத்தோம். அதே போன்று இப்போது நீங்கள் எம்மிடம் தனியாகவே வந்திருக்கிறீர்கள்'' என்று அவனிடம் கூறப்படும். இது அவனுக்கு, பழுக்கக் காய்ச்சிய ஈட்டியால் உள்ளத்தைத் துளைப்பது போலிருக்கும்.

இரண்டாம் வேளை, மறுமைக் காலம் . இந்தச் சமயத்தில் அவன் தனியாக இருக்க மாட்டான். உலகில் வசித்துமாண்ட அனைவரும் ஆஜராகி நிற்பார்கள். எங்குப் பார்த்தாலும் ஜனத்திரள் ; மக்கள் சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தில் அவனும் ஓர் அங்கம். சிலருக்கு விசாரணை நடத்தப்பட்டு, அவர்களில் சிலரைத் தவிர்த்து மற்றவர்களையெல்லாம் சுவனத்திற்கு அழைத்துச் செல்வார்கள் அமரர்கள். வேறு சிலருக்கு விசாரணை நடக்கும். அவர்களில் சிலரைத் தவிர மற்றவர்களெல்லோரும் நரக நெருப்புக்கு இரையாவார்கள்.



இவற்றையெல்லாம் அவன் பார்த்தவாறு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பான். இந்த நேரத்தில் தான் அவனுடைய பட்டோலை - செய்திச் சுருள் அவனுக்களிப்படும். அதில் அவன் தன் நன்மைகளைப் பார்த்து மகிழ்வான்; தின்மைகளைப் பார்த்து வெருள்வான்.

இதுதான் உலகப் பிரளய தினம். இத்தினத்தன்று திடுக்கிடும் சம்பவங்கள் அநேகம் நடைபெறும். ஆனால் அதில் நடக்கும் ஒவ்வொன்றுக்கும் மரண வேளையில் உதாரணம் காணலாம். உதாரணமாக பூகம்பத்தை எடுத்துக் கொள்வோம். பிரளய தினத்தில் பூகம்பம் ஏற்படுவதுபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் மரண வேளையில் பூகம்பம் உண்டாகிறது.

ஓர் ஊரில் பூகம்பம் ஏற்பட்டது என்றால், அதனால் அந்த ஊர் மட்டுமே பாதிக்கப்படுகிறது. அதை அடுத்துள்ள பாகங்களுக்கு எவ்விதச் சேதமும் கிடையாது. குறிப்பிட்ட எல்லையில் தன் லீலையை முடித்துக் கொண்டு பூகம்பப் பிணி எங்கேயோ போய்விடுகிறது. இதை நீயும் அறிகிறாய். இதுபோலவே ஒரு மனிதனின் விஷயத்திலும் பூகம்பம் ஏற்படலாம். அதனால் அவன் பெரிதும் பாதிக்கப்படலாம். ஆனால், அந்த பூகம்பத்தின் சாயல் அவனை அண்டி வாழும் இதரர்களுக்கு ஏற்படாமலிருப்பது சாத்தியமே.

இப்போது விஷயத்திற்கு வருவோம், உன்னை ஒரு நிலப்பரப்பிற்கு - பூமிக்கு ஒப்பிடலாம். ஏனெனில் நீயும் மண்ணிலிருந்து படைக்கப்பட்டவன் தானே?

உன்னுடைய பூமியில் - அதாவது உடலில் உன் மரணத்தின் போது கொடியதொரு பூகம்பம் ஏற்படும். அது உன்னை நிலை கலங்கச் செய்யும்; உன்னை திக்கு முக்காடச் செய்யும். ஆனால், இந்த பூகம்பத்தை, உன்னை அண்டிப் பழகும் யாராலும் உணர முடியாது. இந்தப் பூகம்பத்தினால் உனக்கு மட்டும் தான் சேதம் ஏற்படும். உன் மனைவி, மக்கள்,

உறவினர் முதலிய யாருக்கும் இதனால் நடுக்கமோ, திடுக்கமோ ஏற்படாது. ஏனெனில, அவர்கள் உனக்கு என்னதான் உறவினர்களாயிருந்த போதிலும், உன் பூமியில் - உடலில் அவர்களுக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை. உனக்கென்று தனியானதொரு பூமி இருப்பது போல் அவர்களுக்கும் தனித்தனியாக பூமிகள் உள்ளன.

இந்தப் பூகம்பம் மரணத் தருவாயில் கட்டாயம் வெளிப்டும். ஆனால், இதனால் பாதிக்கப்படுவது நீ தான். குறிப்பாக உன் உடல் தான். ஏனெனில் உன் உள்ளம் எப்போதும் பாதிக்கப்பட்டுத்தான் கிடக்கிறது. அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம்.

இந்தப் பூமிக்கும் வானமுண்டு; விண்மீன்களும் உள்ளன. உன் கண்கள், காதுகள் முதலியவை விண்மீன் களாகின்றன; உன் சிரம் தான் வானம்; உன் நரம்புகளில் விரைந்தோடும் உதிரம் இப்பூமியின் ஆற்றுத் தண்ணீர், கடற்புனல், உன் தலையிலும் இதர பாகங்களிலும் முளைத்திருக்கும் உரோமம் இப்பூமியின் மரம்; செடி.

இப்படி ஆராய்ந்து பார்த்தால், பரந்து விரிந்த மாநிலத்தின் உதாரணத்தைச் சாதாரண மனிதன் ஒருவனில் பெற்றுக் கொள்ளலாம். பேருலகில் பிரளயம் ஏற்படுவது போல் சிறிய உலகிலும் - மரணத்தின் போது பிரளயம் உண்டாகிறது.

மரணம் உன்னை அணுகும் போது உன் பூமி ஆட்டம் கண்டு விடும்; கலகலத்து விடும். உன் பூமியில் பூகம்பமும் சூறாவளியும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு கோரத் தாண்டவமாடும். உன் எலும்புகள் மாமிசத்தை விட்டுப் பிரிந்து போகும். உன் பூமியின் ஒவ்வோர் அங்கமும் இடித்து நொறுக்கப்படும் -உலகப் பிரளயத்தின் போது மலைகள் இடித்து நொறுக்கப்படுவது போல.



மரணம் உன்னைக் கட்டித் தழுவிக் கொள்ளும்போது உன் புலன்கள் - உன் பூமியின் விண்மீன்கள் மங்கி மழுங்கிவிடும். உன் பூமிக்குச் சூரியனாய் இருந்த உள்ளம் தன் ஒளியை இழந்து விடும் - உலகப் பிரளயத்தின் போது சூரியன் தன் ஒளியை இழப்பது போல !

உன் மூளை சக்தியிழந்து இருண்டு விடும். உன் பூமி யின் ஆறுகளும், கடல்களும் விரைந்து சென்று உறைந்து போகும்.

நீ இறப்பதோடு உன் பூமிக்கும் முடிவுகாலம் ஏற்படு கிறது. பின்னர் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட அந்தப் பிண்டம் - உன் பூமி, மண்ணுக்கே செல்கிறது.

ஆக, மனிதனின் ஒவ்வொரு நிலைமையையும் சித்தரித் துக் காட்டி நூலை விரிவாக்குவதை நான் விரும்பவில்லை. அது உசிதமுமல்ல. என்றாலும் ஒன்று மட்டும் சொல்கிறேன். மரணத்தின் போது உனக்கு ஏற்படும் இவ்வேதனைகளின் காரணமாக உலகின் அழிவின் போது ஏற்படும் திகிலைத் தவிர்க்கமுடியாது. உரிய காலத்தில் நீ அதையும் அனுபவித் துத் தான் தீர வேண்டும்.

இது சிறிய பிரளயம்; உன்னுடைய பஞ்சடைந்த கண் களையும், உணர்ச்சியற்ற செவிகளையும் பார்ப்போர் என்ன எண்ணுவார்கள்? அந்த அமைதியைப் பார்த்து அவர்களால் எதை ஊகிக்க முடியும்? எதை ஊகித்தாலும் எதை ஊகிக்கா விட்டாலும் அந்த அமைதி பூகம்பத்திற்குப் பிறகு நிலவும் பயங்கர அமைதி என்று மட்டும் அவர்களால் ஊகிக்க முடியாது. அவர்களைக் கேட்டால் "இதோ கண்கள் இருக்கின்றனவே! கறுப்பு விழி அப்படியே இருக்கிறதே!'' என்று தான் கூறுவார்கள்.

ஆம், உண்மைதான். ஆனால் அந்தக் கண்களால் - பொலிவிழந்த விண்மீன்களால் உனக்கு என்ன பயன்? அவற்றை இனிமேல் உன்னால் பயன்படுத்த முடியுமா?

விண்ணில் எப்போதும் விண்மீன்கள் பிரகாசிக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றினால் குருடனுக்கு ஏதேனும் பயனுண்டா? அவனுக்கு இரவும், பகலும் ஒன்றுதான். சூரியன் ஒளியைப் பொழிவதும், ஒளி மழுங்கி மறைவதும் அவனுக்குச் சமம் தான்.

இந்த நிலையில் தான் நீ இருப்பாய். அப்போது இவ்வேளையில் நீ மட்டும் தனியாக அனுபவிப்பாய். பிறரும் அப்படியே தனித்தனியாக அனுபவிப்பார்கள். இது சிறிய பிரளயமல்லவா? ஆனால், பெரிய பிரளயத்தின் போது நிலைமை வேறுவிதமாக இருக்கும். அதில் நடக்கும் ஒவ்வொன்றிலும் சகலரும் பங்கு கொள்வார்கள்; பங்கு கொள்ளவேண்டும். எந்த மனிதனும் தப்பியோட முடியாது. அப்போது விண்ணும் மண்ணும் தகர்த்தெறியப்படும்; மலைகள் நொறுக்கி வீசப்படும்..

இவற்றை எல்லாம் விவரிக்க ஆரம்பித்தால், நம்மால் நூற்றில் ஒரு பாகத்தைக் கூட விவரிக்க முடியாது.

சிறிய பிரளயம், பெரிய பிரளயம் ஆகிய இரண்டையும் மனிதனின் சிறிய பிறப்பு, பெரிய பிறப்பு ஆகிய இரண்டுக்கும் முறையே ஒப்பிடலாம்.

என்ன கேட்கிறாய் ? ''அது என்ன சிறிய பிறப்பு'' என்று தானே கேட்கிறாய்? இதோ சொல்கிறேன். கவனித்துப் படி.

மனிதனுக்கு இரண்டு பிறப்புகள் உள்ளன:

1. தந்தையின் முதுகெலும்பிலிருந்து அன்னையின் கர்ப்ப அறையை அடைவது. இதைச் சிறிய பிறப்பு எனலாம். அதில் அவன் விந்துருவில் சில நாட்கள் தங்கியிருந்து, பின்னர் உதிரக் கட்டியாகவும், சதைப்பிண்டமாகவும் உருமாறிச் சிசுவின் வடிவை அடைகிறான்.



2. மனிதன் தன் தாயின் இருட்டறையிலிருந்து பரந்து விரிந்த இப்பூவுலகில் காலை வைப்பது. இதனைப் பெரிய பிறப்பு என்று அழைக்கலாம்.

சிறிய பிறப்பு எப்படி அமைக்கப்பட்டதோ, அப்படியே பெரிய பிறப்பும் அமைக்கப்பட்டு விட்டது. இவ்விரண்டில் எதையும் யாரும் மறுக்க முடியாது.

இதே போன்று சிறிய பிரளயம் - மரணம் ஏற்படுவது எப்படி நிச்சயமோ, அப்படியே பெரிய பிரளயம் - உலகத்தின் மரணம் - உலகத்தின் அழிவு ஏற்படுவதும் நிச்சயமே. இதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. சிறிய பிரளயத்தைக் கண்கூடாய்க் காணும் ஒருவன், அதற்குப் பின்னர் ஏற்படப் போகும் பெரிய பிரளயத்தை நம்பவில்லையாயின் அது அவன் அறியாமையே.

மரணத்தின் போது நிகழும் காட்சிகள் உன் கண்ணெதிரே இருக்கின்றன. அவற்றை நீ தெளிவாகப் பார்க்கிறாய். அப்படியிருந்தும் மறுமையை நீ மறுத்தால், உன்னைவிடக் கேடு கெட்ட மடையன் ஒருவன் இருக்க முடியுமா?

''ஒரு மனிதனுக்கு மரணமே போதிய உபதேசம் செய்கிறது'' என்ற நபி (ஸல்) கருத்தை நீ கேட்டதில்லையா? மரணத்தை எண்ணியும் பாராமல் நன்மையான காரியங்களை ஒத்திப் போடுகிறாயே, இதை நினைக்க உனக்கே வெட்கமாக இல்லையா?

''அவர்கள் எதிர்பாராமல் வீசும் கொடிய புயலுக்கு இரையாகி மாள்வார்கள். அப்போது தங்கள் இனபந்துக்களுக்கு உபதேசம் செயவ்தற்குக் கூட அவர்களுக்கு நேரமிருக்காது''

என்று இறைவன் கூறுகிறானே, அத்தகையவர்களில் நீயும் சேர்ந்து விட விரும்புகிறாயோ? கை சேதம்!

மனிதனுக்கு வியாதி வருகிறது. அது தான் மரணத்தின் தூதன். அதை விரட்டியடிக்க அவன் முனைந்து வரும்போது

அவனது ரோமங்களுக்கிடையில் நரை முடிகள் மின்ன ஆரம்பித்து விடுகின்றன. இந்த நரை மட்டுமென்ன? இதுவும் மரணத்தின் ஏவலாளி தான். இதையெல்லாம் மனிதன் உணர்கிறானா? எங்கே உணரப் போகிறான்?

''எந்தத் திருத்தூதர் வந்தாலும் அவர்கள் கேலி கிண்டல் செய்தார்கள். இவ்வுலகிலேயே நிரந்தரமாக வசிப்போம் என்று அவர்கள் எண்ணுகிறார்களா என்ன? '' என்று இறைவன் கூறுவது எத்தனை பொருத்தம்!

இறைவன் மீண்டும் நவில்கிறான் :

''அவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ சமூகத்தவரை அழித்துவிட்டோம். அதையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லையா ? அல்லது அவர்கள் நம்மிடம் வரவே மாட்டார்களென்று கருதுகிறார்களா? அல்லது மரணித்தவர்கள் இனி எழவே மாட்டார்கள் என்று நம்புகிறார்களா? அப்படியல்ல! சகலரும் எம் முன்னிலையில் கொண்டு வரப்படுவார்கள்.''

மேலும் கூறுகிறான் :

''அவர்களின் நாயனிடமிருந்து ஆதாரங்கள் வரும் போதெல்லாம் அவர்கள் அவற்றைப் புறக்கணித்தார்கள். ஏனெனில், அவர்களுக்கு முன்னாலும், அவர்களுக்குப் பின்னாலும் நாம் திரையை உண்டாக்கி விட்டோம். அவர்களின் பார்வையை நாம் மறைத்து விட்டோம். எனவே அவர்களுக்கு நீர் உபதேசம் செய்வதும் செய்யாமலிருப்பதும் ஒன்று தான். அவர்கள் உம்மை நம்பமாட்டார்கள்.''

சரி, இப்போது நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு வருவோம். மேற்குறிப்பிடப்பட்டவை சில திருமறை வசனங்கள். அவை மிகவும் உயர்ந்த ஞானத்தைப் போதிக்க வல்லவை. அந்த ஞானம் சாதாரண உலகியல் ஞானத்தை விட எத்தனையோ மடங்கு உயர்ந்தது; சிறந்தது.



இதுவரை நாம் அறிந்தவற்றிலிருந்து நாம் எந்த முடிவிற்கு வருகிறோம்? ஆம். பொறுமை என்பது, காம உணர்ச்சிக்கு எதிராக நின்று போர் புரியும் மத உணர்ச்சியே என்ற முடிவிற்கு வருகிறோமல்லவா?

இவ்வாறு நடைபெறும் மனப் போராட்டம் மனிதனுக்கு - வயது வந்த வாலிபனுக்குச் சொந்தமானதாகும். இந்தப் போராட்டம் சிறுவர்களிடமோ மதியை இழந்த பைத்தியக்காரர்களிடமோ கிடையாது. அவர்கள் ஏறத்தாழ மிருகத்தையொத்தவர்கள். ஏனெனில், சிறுவனுக்கு அமரர்களின் உதவி கிடையாது. பைத்தியக்காரன் அமரர்களின் உதவியை ஏற்றுக் கொள்வது கிடையாது. அறிவு பழுதுறாமல் இருந்தாலல்லவோ ஏற்றுக் கொள்வதற்கு வழி உண்டாக முடியும்? அது தான் அவனுக்கு மழுங்கிப் போய் விட்டதே!

''நன்மை என்பது அமரரின் கருத்தை ஏற்றுக் கொள்வதிலும், தின்மை என்பது அந்தக் கருத்தைப் புறக்கணிப்பதிலுமே உண்டு'' என்று நான் ஆரம்பத்திலேயே விவரித்து விட்டேனல்லவா? இதன் படிப் பார்க்கும் போது சிறுவர்களுக்கும், பித்தர்களுக்கும் அந்த அமரர்கள் எந்த நன்மையையும் எழுத மாட்டார்கள்; எவ்விதத் தின்மையையும் குறிப்பிட மாட்டார்கள். அவர்களுக்கு நன்மை எது, தின்மை எது என்று தெரியாது. சொன்னாலும் புரியாது சிறுவனுக்கு; விளங்காது பைத்தியக்காரனுக்கு!

பாலப் பிராயத்தில் எல்லோரும் இப்படித் தானிருப்பார்கள். பாகுபாடு படுத்தும் வயது வரும் போது சிறுவனின் உள்ளத்தில் நேர்வழிச் சுடர் மெதுவாகப் பிரகாசிக்க ஆரம்பிக்கும். அவன் படிப்படியாக வளர்ந்து பிராயத்தை அடையும் போது, அந்தச் சுடரும் படிப்படியாக உயர்ந்து உச்சியை அடைகிறது. அதிகாலையில் வியாபித்து நிற்கும் ஒளி - மங்கிய ஒளி படிப்படியாக அதிகரித்து அருணோதயம் வரை உயர்வது போல் இந்த நேர்வழிச் சுடரும் வயதைப் பொறுத்து வளரும்.

சூரியனின் ஒளியை இதற்கு ஒப்பிட்டதில் தவறு ஒன்று மில்லை. ஆனால், சூரிய ஒளி பரிபூரணமானதல்ல. ஏனெனில், அதன் ஒளியில் மறுமைக்குரிய எந்தப் பாதையையும் பார்த்து நடக்க முடியாது. அது இந்த உலகின் இருளை மட்டும் - அதுவும் தனக்கு எதிரேயிருக்கும் நிலப் பாகத்தின் இருளை மட்டும் விரட்டியடிக்கும், அவ்வளவு தான்.

ஆனால் சிறுவனுக்கு, நன்மை தின்மை கிடையாது என்று எண்ணிக் கொண்டு அவனை மனம் போன படி நடக்கவிடக் கூடாது. அவனுடைய முழுப் பொறுப்பும் பெற்றோரின் மீதே விழும் என்பதில் ஐயமில்லை. எனவே தொழாத சிறுவனை அடித்துப் படியுச் செய்ய வேண்டும். என்றாலும், அவன் தொழவில்லை என்ற காரணத்தினால் அவனுக்கு மறுமையில் தண்டனை கிடையாது என்பதையும் மறந்து விட வேண்டாம். இளம் பிராயத்திலேயே நல்ல செயல்களில் ஈடுபடுத்தினால் தான் போகப் போக அவனுக்கு நேரிய பாதையில் நடப்பது எளிதாயிருக்கும்.

இவ்வாறு சிறு வயதிலேயே தொழுகை, நோன்பு குர்ஆன் ஓதுதல், மார்க்க உபன்யாசத்திற்குச் செல்லுதல் முதலியவற்றில் கவனத்தைத் திருப்புவதால் அவன் பின்னொரு காலத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றால் அது குறித்து ஆச்சரியப்பட முடியாது. இறையண்மையைப் பெற்று அவன் பேரின்பமடைவதும் சாத்தியமே. அவன் மறுமையில் நபிமார்களுடன் இருப்பதையும் எதிர் பார்க்கலாம்.

# 3. பொறுமை ஈமானில் பாதி

''பொறுமை ஈமானில் பாதி'' என்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொறுமை எப்படி ஈமானில் பாதியாகிறது என்று இப்பொழுது ஆராய்வோம்.

''ஈமான்'' என்ற வார்த்தையைச் சில சமயங்களில் அதற்குரிய அடிப்படைச் சட்டங்களுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். வேறு சில சமயங்களில் அந்தச் சட்டங்களுக்கொப்ப செயலாற்றும் சூழ்நிலையை ஈமான் என்று குறிப்பிடுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் பொறுமை ஈமானில் பாதி என்பதில் ஐயமில்லை.

ஈமானுக்கு இரண்டு அங்கங்கள் உள்ளன. ஒன்று திட நம்பிக்கை; மற்றொன்று பொறுமை. இந்த இரு அங்கங்கள் கொண்டதே ஈமான். அப்படியானால் பொறுமை என்பது ஈமானில் பாதியாவது திண்ணம்.

ஒரு மனிதன் மதப்பாட்டையில் முன்னேற வேண்டுமாயின், இந்த இரு அம்சங்களும் அவனுக்கு அவசியம். அதாவது பாவங்களால் கேடுகள் விளைகின்றன என்றும் அறிய வேண்டும். அறிந்தால் மட்டும் போதாது; அந்த அறிவின் மீது திடமான நம்பிக்கையும் வேண்டும். இது முதல் அம்சம்.

அடுத்தபடியாகத் தீமையை விட்டு விலகி நன்மையில் ஈடுபடுவது. இவ்வாறு தீமையை விடுவதும் நன்மையில் ஈடுபடுவதும் பொறுமையைக் கையாள்வதால் மட்டுமே நடை பெற முடியும். பொறுமை என்றால் காம உணர்ச்சியை

மத உணர்ச்சியால் அடக்குவது என்று நான் குறிப்பிட்டதை மறந்து விடாதே!

எனவே, பொறுமை ஈமானில் பாதியாகிறது. மற்றொரு பாதி திட நம்பிக்கை. ஆகவே தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துக் கூறியிருக் கிறார்கள் :

''உங்களுக்கு அருளப்பட்ட அருட்கொடைகளிலேயே மிகவும் அரிதாகக் கிடைப்பது திட நம்பிக்கையும் பொறுமை யும் தான்.''

# 4. எதில் பொறுமை?

இப்போது புதியதொரு பிரச்சினை தலை தூக்குகிறது. ''எந்த விஷயத்தில் பொறுமையைக் கையாள வேண்டும்'' என்ற கேள்வி தானாகவே உதயமாகி விடுகிறது. எனவே இப்பிரச்சினைக்கு முடிவு காணுவோம்.

1. உடல் சம்பந்தப்பட்ட பொறுமை : உடலில் ஏற்படும் கஷ்டங்களையும் வருத்தங்களையும் பொறுத்துக் கொள் வதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இத்தகைய பொறுமை சில வேளைகளில் செயல்களோடு தொடர்பு கொள்ளும். கடினமான வேலையைப் பொறுமையோடு செய்வது, கடினமான முறையில் இறைவனை வணங்குவது முதலியவை இதற்குச் சரியான உதாரணங்கள். இவை எல்லாம் செயல் முறையில் ஏற்படும் பொறுமை.

வேறு சில சமயங்களில் சகிப்புத் தன்மையோடு பொறுமை தொடர்பு கொள்ளும். கடின தண்டனையைப் பொறுத்துக் கொள்வது, வேதனை நிறைந்த வியாதி முதலியவற்றைச் சகித்துக் கொள்வது முதலியவை இதற்குத் தகுந்த உதாரணங்கள்.

மேற்குறிப்பிட்டவற்றில் பிந்திய மூன்றும் புகழுக்குரிய பொறுமைகளாகும். அவற்றை மார்க்கம் புகழ்கிறது.

வயிற்றின் இச்சையையும்; காமத்தின் உணர்ச்சியையும் எதிர்த்துப் பொறுமையைக் கையாள வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படுவதுண்டு. இந்தப் பொறுமைக்கு உயர்ந்த மதிப்புண்டு. ஒரு மனிதன் இன்னலில் பொறுமையோடு செயலாற்றுவதாக வைத்துக் கொள்வோம். இந்தப் பொறுமை

யும் உயர்ந்தது தான். இதற்கு மாற்றமாகத் தன் இன்னலை எண்ணி எண்ணி அலைமோதுவது கூடாது.

ஒருவன் போர்க்களத்திற்குச் செல்வதாக வைத்துக் கொள்வோம். போர்க்களத்தின் நிலைமையை அவன் பார்ப்பான். வாளோடு வாள் மோதுவதையும் மனித உயிர்கள் மாண்டு மடிவதையும் அவன் காண்பான். உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதையோ, அதில் அலங்கோலப்பட்டுக் கிடக்கும் மனித அங்கங்களையோ அவனால் பார்க்காமல் இருக்க முடியாது.

இச்சமயத்தில் அவன் மனம் அவனுக்கு உபதேசம் செய்யும் :

''நீயும் ஏன் இந்த முடிவிற்குப் போகிறாய்? உன் உயிருக்கு உன் கையாலே ஏன் குழி தோண்டுகிறாய்?''

இப்போது அவன் தன் மனத்தை அடக்கியாள வேண்டும். இது தான் பொறுமை. இந்தப் பொறுமைக்கு 'வீரம்' என்றும் பெயரிடலாம். இதன் எதிர்ப்பதம் 'கோழைத் தனம்.'

ஒருவன் தன் சினத்தை- வஞ்சத்தை அடக்கிக் கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். இதுவும் பொறுமை தான். இதற்குப் பெயர் 'பெருந்தன்மை'. இப்படிப் பலதரப்பட்ட காரியங்களில் பொறுமைக்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப்படுகின்றன.

அடுத்தபடியாக ஒரு அரசனை எடுத்துக் கொள்வோம். அவன் தன் மனத்தையடக்கி நேரிய வழியில் நடந்தால் அவன் பொறுமையாளனாகிறான். இந்தப் பொறுமைக்கு 'நியாயம்' என்று பெயர் வழங்கப்படும்.

ஒருவன் மெதுவாகப் பேசுவதாக வைத்துக் கொள்வோம். வழக்கப்படி பீரிட்டு வரும் வார்த்தைகளை அடக்கி



யாண்டு பொறுமையோடு பேசுவதாக வைத்துக் கொள்வோம். இதுவும் பொறுமை தான்.

இதன் பெயர் 'அமைதி'.

ஒருவன் வீண்விரயம் செய்வதிலும், இன்ப வாழ்க்கை அனுபவிப்பதிலும் புலியாயிருக்கலாம். அவன் அப்படியெல்லாம் நடக்காமல் மனத்தைக் கட்டுப்படுத்தும் போது, அவன் பொறுமையாளனாகிறான். இந்தப் பொறுமை 'துறவு' என்ற பெயரைப் பெறுகிறது.

ஒருவன் தன்னிடமுள்ளதைக் கொண்டே திருப்தியடைந்தால், அந்தப் பொறுமைக்குத் 'திருப்தி' என்று பெயர் வழங்கலாம்.

ஆக ஈமான் பல்வேறு பிரிவுகளாகப் பிரிவதால் பொறுமையும் பலதரப்பட்ட பிரிவுகளாகப் பிரிகிறது. ஏனெனில், ஈமானில் பாதியல்லவா பொறுமை?

ஒரு தடவை திருநபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார் :

''ஈமான் என்றால் என்ன?''

அதற்கு நபி(ஸல்) அவர்கள் ஒரே வார்த்தையில் பதிலிறுத்தார்கள் : ''பொறுமை''.

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதற்கும் தக்க காரணம் இல்லாமற் போய் விடவில்லை. ஈமானிலிருந்து வெளிப்படும் பெரும்பாலான செயல்கள் பொறுமையையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறினார்கள்.

மேலும் கூறினார்கள்

''இறைவன் பல்வேறு வகைகளையும் ஒன்றாகச் சேர்த்து அவற்றிற்குப் பொறுமை என்று பெயரிட்டான்.''

இறைவன் கூறுகிறான் :

''இன்னலிலும், வறுமையிலும், போர்க்களத்திலும் பொறுமையைக் கையாள்பவர்களே உண்மையாளர்கள். இறையச்சம் உள்ளவர்கள்.''

இவற்றிலெல்லாம் ஒரு மனிதன் பொறுமையாயிருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இவை தாம் பொறுமையின் வகைகள். இவற்றை எல்லாம் நீ ஒருவாறு உணர்ந்து கொண்டால் போகப் போக உனக்கு நன்மை ஏற்படும். இவைகளில் உபயோகிக்கப்பட்ட பெயர்களை மட்டும் வைத்துக் கொண்டு மதிமயங்காதே!

அவற்றிற்குரிய விளக்கங்களையும் நன்கு ஆராய்ந்து பார். ஏனெனில், மடையர்கள் இது போன்ற பிம்பத்தைக் கண்டு தான் ஏமாந்து போகிறார்கள்.

# 5. பொறுமையின் பிரிவுகள்

மத உணர்ச்சியைக் காம உணர்ச்சியுடன் சேர்த்துப் பார்த்தால், மத உணர்ச்சியை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம்.

1. காம உணர்ச்சியைக் கட்டோடு நசுக்கும் நிலைமை. இதனால் காம உணர்ச்சி எதிர்க்கும் ஆற்றலை இழந்து விடும். மத உணர்ச்சியோடு போரிடாமல் புறமுதுகு காட்டி ஓட்டம் பிடிக்கும். இந்த நிலைமையை ஒருவன் அடைந்து விட்டால் அதன் பிறகு அவன் தொடர்ந்து பொறுமையைக் கையாள்வதற்கு வசதி ஏற்படும். அவன் நிரந்தரப் பொறுமையாளனாக மாறுவதற்கும் வழியுண்டு. ''பொறுமையை மேற் கொண்டவன் வெற்றியடைந்து விட்டான்'' என்னும் கருத்து அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஆனால், இத்தகைய அந்தஸ்தை அடைந்தவர்கள் - அடைபவர்கள் அபூர்வம்; சொற்பம். அவர்கள் தாம் இறையண்மையையும், இறையன்பையும் பெற்ற உத்தமர்கள்.

இவர்களின் குறிக்கோள் என்ன? இவர்களின் சுபாவம் என்ன? இவர்கள் நடக்கும் பாதை எது? என்பன போன்ற பிரச்சினைகள் இங்குத் தேவையில்லை. அவர்கள் ''எங்கள் நாயன் அல்லாஹ்வே'' என்று சொல்வார்கள். நாமும் அப்படித் தானே சொல்லுகிறோம்; நம்புகிறோம்!

ஆனால், அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டுப் பேசாதிருந்து விட மாட்டார்கள். நேர்மையோடு நடப்பார்கள்; அறநெறியைத் தவற விடாது கடைப்பிடிப்பார்கள்.

இவர்களின் விஷயத்தில் தான் இறைவன் கூறுகிறான் :

''எங்கள் நாயன் அல்லாஹ் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் நேர்மையாக நடப்பார்கள்''.

மத உணர்ச்சிக்கொப்ப அவர்களின் உள்ளம் வளைந்து கொடுக்கும். ''அமைதியான மனமே! உன் இறைவனிடம் செல்வாயாக...'' என்ற இறை வசனம் அவர்களின் நிலையைச் சித்தரிக்கிறது.

2. காம உணர்ச்சிக்கும், மத உணர்ச்சிக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தில் காம உணர்ச்சி வெற்றி காணும் நிலைமை. இந்த நிலைமையில் மத உணர்ச்சியை எதிர்க்கும் ஆற்றலை அதனிடம் காண முடியாது. இந்நிலைமை ஒரு மனிதனுக்கு ஏற்படுவது வருந்தத் தக்க விஷயமே. அவன் தன் உள்ளத்தை ஷைத்தானிடம் ஒப்படைக்க நேருகிறது. அதன் பிறகு என்ன? ஷைத்தானின் ஆட்சி தான் நடைபெறும். அந்த ஷைத்தான் தன் விரோதியான மத உணர்ச்சியைக் கட்டோடு அழிக்க முயல்வான். இயல்பு தானே! எந்த அரசனும் தன் விரோதிக்கு - அதிலும் தன்னைக் கவிழ்க்க முயலும் விரோதிக்குத் தன் ஆட்சியிலேயே இடமளிக்க மாட்டான். அப்படியே இடமளித்தாலும் செல்வாக்களிக்க மாட்டான். இது இயற்கை. எனவே, நாளுக்கு நாள் ஷைத்தானின் கரம் ஓங்கும் போது, அதன் எதிரில் மத உணர்ச்சி தலைகுனிவது இயற்கை. இதனால் அது தன் எதிரியிடம் - ஜன்ம விரோதியிடம் மண்டியிட்டுச் சரணடைய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறது.

இத்தகையவர்களைக் கவனம் குறைந்தவர்கள் என்று குறிப்பிடலாம். இவர்கள் தாம் மக்களின் மத்தியில் அதிகம்.

இவர்கள் யார் தெரியுமா? தங்கள் உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு மதியை இழந்தவர்கள்; கைசேதப்பட வேண்டிய



வர்கள்; நம் அனுதாபத்திற்குரியவர்கள். இவர்களின் உள்ளப் பீடத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்துவது இறைவனின் எதிரி: ஷைத்தான்.

உள்ளம் பரிசுத்தமானது என்று உனக்குத் தெரியும். அது இறைவனால் மனிதனுக்கு அருளப்பட்ட புதையல், மனித வல்லரசின் ஆட்சி பீடம். அந்த பீடத்தில் ஷைத்தான் அமர்ந்தால், அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளைப் பற்றி நான் விவரிக்கத் தயாராயில்லை. ஏனெனில் அவை விவரிக்க முடியாத அளவிற்குக் கொடூரமானவை.

இவர்களைப் பற்றித் தான் இறைவன் அடியிற் கண்டவாறு கூறுகிறான் :

''நாம் விரும்பினால் ஒவ்வொரு மனிதனுக்கும் நேர்வழியைக் காட்டிவிடுவோம். ஆனால், 'நரகத்தை மனிதர்களாலும் ஜின்களாலும் நிரப்புவேன்' என்ற வாக்கு முந்திவிட்டது''.

இவர்கள் இம்மையை, மறுமையைவிட உயர்ந்தது என்று கருதுவார்கள். இவர்களுக்கு நேர்வழி காட்டுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. இறைவனுடைய வார்த்தையையே புறக்கணித்த இவர்கள் வேறு யாருடைய வார்த்தையைத் தான் புறக்கணிக்கத் தயங்கப் போகிறார்கள் !

இவர்களின் குறிக்கோள் இம்மை தான். அதை அடைய அவர்கள் அல்லும் பகலும் உழைப்பார்கள். மறுமையைப் பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. இவர்கள் கற்ற கல்வியின் பயன் இது தான். அந்தோ பரிதாபம்!

''உள்ளத்தை அடக்கியாண்டு மரணத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் மறுமை வாழ்க்கைக்குப் பயன் படுப

வற்றைச் செய்பவனே அறிஞன். மனம் போன போக்கிலே நடந்து திரிபவன் அறிவிலி''

என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த இழி நிலையை அடைந்த ஒருவனிடம் உபதேசம் செய்யப்பட்டால், அதற்கு அவன் என்ன சொல்வான் என்று எண்ணுகிறாய்? அவன் இப்படித் தான் பதிலளிப்பான்.

''நான் பாவியாகிவிட்டேன் என்பதை ஒப்புக் கொள் கிறேன். என் பாவங்களுக்காக இறைவனிடம் பாவ மன்னிப் புக் கோர வேண்டும் என்ற ஆவலும் எனக்குண்டு. ஆனால் நான் எப்படிப் பாவ மன்னிப்புக் கோருவேன்? என் பாவங்கள் மலையைப் போல் குவிந்திருக்கின்றனவே! பாவ மன்னிப்புக் கோரும் எண்ணத்திலேயே தான் இருந்தேன். என்றாலும், 'இறைவன் பிழை பொறுத்துக் கிருபை செய்வான்' என்ற இறை வசனத்தை என்னால் எப்படி மறக்க முடியும்? எனவே, நான் பாவ மன்னிப்புக் கோர வேண்டிய தேவை தான் என்ன? இறைவனுக்குத் தான் என் நிலைமை தெரியுமே....''

முன்னுக்குப் பின் முரணாக இப்படிப் பேசி முடிப்பான் அந்த மனிதன்.

அவன் அறிவு காம உணர்ச்சியிடம் அடிமையாகி விட்டது. எனவே, அது அவனுக்கு நல்ல மார்க்கத்தைக் காட்டாது. அந்த ஆற்றல் பறிக்கப்பட்டு விட்டது. எந்தெந்த வழிகளில் காமப் பேயாட்டம் ஆடலாம் என்று அது கூறும். எந்தக் குடியை எப்படிக் கெடுக்கலாம் என்று வழி வகுத்துக் கொடுக்கும்.

காபிரான அரசன் ஒருவனுக்கு முன்னால் நிற்கும் முஸ்லிமான கைதியைப் போல, அவன் அறிவு காம மன்னனின் பிடியில் சிக்கிக் கொண்டு தவியாய்த் தவிக்கும். ஆனால் அதற்கு யாரால் உதவி செய்ய முடியும்?



உலகில் வணங்கப்பட்ட கடவுள்களிலேயே மிகவும் கொடியது இச்சை.

உலகில் படைக்கப்பட்டவற்றிலேயே மிகவும் சிறப்புடையது அறிவு.

அவற்றில் உனக்குப் பயன் தர வல்லது எது என்று நான் சொல்லித் தர வேண்டியதில்லை. அது நீயாகவே பார்த்துக் கொள்ள வேண்டிய விஷயம்.

3. மத உணர்ச்சிக்கும் காம உணர்ச்சிக்குமிடையில் பயங்கரமான போர் நிகழும் நிலையில் சில நேரங்களில் மத உணர்ச்சி வெற்றியை அணுகும். வேறு சில சமயங்களில் காம உணர்ச்சி வெற்றியை நோக்கி விரையும். ஆனால் ஒன்று மற்றொன்றுக்குச் சளைக்காது.

இத்தகைய அந்தஸ்தையுடையவர்கள் முதல் வகையி னரைவிடத் தாழ்ந்தவர்கள்; இரண்டாவது வகையினரை விட உயர்ந்தவர்கள். இவர்களின் நன்மைகள் தின்மைகளோடு கலக்கின்றன. எனினும் இறைவனிடம் இவர்களுக்கு அதி விரைவில் மன்னிப்புக் கிடைத்து விடும்.

மேற்குறிப்பிட்ட மூன்று வகைகளையும் இது வரை நீ நன்கு உணர்ந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். அந்த மூன்றும் வலுவான பொறுமையையும், வலுவற்ற பொறுமையையும் பொறுத்தவை. பொறுமை எல்லோரி டமும் ஒரே உறுதியுடன் இருக்காது. சிலரது பொறுமை புயலிலும் அசையாது; வேறு சிலரது பொறுமை தென்றலி லேயே தடுமாற்ற மடையும்!

இப்போது வேறொரு வகையில் பொறுமையைப் பங்கு போடுவோம்.

1. சிலர் தங்கள் உள்ளத்தில் ஏற்படும் தீய உணர்ச்சிகள் யாவற்றையும் அடக்கியாண்டு விடுவார்கள். இவர்கள் தாம்

சிறந்தவர்கள் என்று சொல்லாமலே தெரியும். இவர்களைப் பற்றிக் குர்ஆனிலும் ஹதீதிலுமாக எண்ணிறந்த திரு வசனங்கள் காணப்படுகின்றன.

2. இன்னும் சிலர் தங்களுக்கு ஏற்படும் தீய உணர்ச்சி களில் சிலவற்றை மட்டும் அடக்கியாள்வார்கள்; வேறு சிலவற்றை அவற்றின் போக்கிலேயே விட்டு விடுவார்கள். இவர்களைப் பற்றித் தான் இறைவன் ''நன்மையைத் தின்மையோடு கலப்பவர்கள்'' என்று குறிப்பிடுகிறான். இந்த நிலையிலிருப்பது விரும்பத்தக்கதல்ல.

3. இன்னும் சிலர் தங்கள் காம உணர்ச்சிக்கும் தடை விதிக்கவே மாட்டார்கள். தீய உணர்ச்சிகள் யாவற்றிற்கும் தாராளமாக இடமளித்து விடுவார்கள்; அவற்றின் விளைவுக் கொப்பக் கூத்தாடுவார்கள். இவர்கள் ஏதேனுமொரு தீய உணர்ச்சியையேனும் அடக்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இவர்கள் காமத்தின் தூதர்கள்; அடிமைகள். காமம் குறிப் பிடும் செயலைத்தான் இவர்கள் செய்வார்கள். அதுதான் அவர்களின் சிறந்தபணி. அதைச் செய்யாமலிருப்பதும் அவர்களுக்குச் சாத்தியமில்லை. எப்படிச் சாத்தியமாகும்? எஜமானின் கட்டளையை அடிமை மறுக்க முடியுமா?

இவர்கள் மிருகத்தை யொத்தவர்கள் என்று துணிந்து கூறலாம். இன்னும் சொல்லப் போனால், இவர்கள் மிரு கத்தை விட கேடு கெட்டவர்கள் எனலாம். ஏனெனில், மிருகங்களுக்கு நன்மை தின்மையை அறியும் ஆற்றல் அருளப்படவில்லை. அதே போன்று காமத்தோடு போராடும் சக்தியும் அவைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, அவை காமத்திற்கும் இச்சைக்கும் இலக்காகி அலைந்து திரிவது அதிசயமல்ல. அவை பொறுமையைக் கையாள வில்லையே என்று யாரும் சிந்திக்க வேண்டியதில்லை.



ஆனால் மனிதனின் நிலைமை அப்படி இல்லையே! அவனிடம் பகுத்தறிவு மட்டுமல்ல. வல்லவனை அறியும் நல்லறிவுமல்லவா இடம் பெற்றிருக்கிறது. அவனுக்குக் காமம் உண்டு. அதே சமயத்தில் அதை ஒடுக்கி நல்ல வழியில் செலுத்தப் பொறுமைக் குணமும் அவனிடம் உண்டு.

இப்படியெல்லாம் இருந்தும் அவன் நேர்மையை எடுத்துக் கொள்ளவில்லை யென்றால், அவனைவிடக் குறு மதியுடையவன் யாரேனும் இருக்க முடியுமா? இத்தகைய மனிதன் கண்டிப்பாகக் குறமதியுடையவனே; சக்தியைப் பயன்படுத்தத் தெரியாத ஏமாளியே!

இதுதான் உண்மை. இதை நீ மனதில் இருத்திக் கொண்டு செயலாற்று!

அடுத்தபடியாக, பொறுமையை இன்னும் சில பாகங் களாகப் பிரிக்கலாம்.

1. சில சமயங்களில் பொறுமையை மேற்கொள்வது மிகவும் சிரமமாக இருக்கும். மனத்தை அடக்கிப் பொறு மையை வரவழைப்பதற்கே பெரிதும்பிரயத்தனப்பட வேண்டியிருக்கும். இது போன்ற பொறுமை அதிக நாட்கள் வரை நீடித்து நிற்காது. இப்பொறுமையை நிரந்தரமாக் குவதற்கு மனப் போராட்டமும், உள்ளக் கட்டுப்பாடும் வேண்டும். பெருத்த சிரமத்துடன் பலப்படுத்தப்படும் இப்பொறுமை சிறந்தது என்பது தெளிவு. இத்தனை சிரமங்களுக்கிடையில் பொறுமையை மேற்கொள்பவர்கள் மிகவும் சொற்பம்.

2. வேறு சில சமயங்களில் பொறுமையை மேற்கொள் வது அவ்வளவு சிரமமாக இருக்காது. சாதாரண முயற்சியி னாலேயே பொறுமையை உண்டாக்கிக் கொள்ளலாம். ஏதோ

உள்ளத்தைச் சிறிது மடக்க - ஒடுக்க நேரிடும்: அவ்வளவு தான். இறையச்சமும், மறுமையில் பொறுமைக்குக் கிடைக்கும் நற்கூலியும் அடிக்கடி மனத்தில் பிரதிபலிக்கும் போது, இந்தப் பொறுமை நிரந்தரத்துவம் பெற்றுவிடும். ஆகவே, இந்த அந்தஸ்த்தை அடைபவர்கள் இறைத்தியானத்திற்குத் தங்கள் உள்ளத்தில் எந்நேரமும் இடமளிக்க வேண்டும்.

''தருமம் செய்து இறைவனுக்கு அஞ்சி மறுமையின் நற்கூலியை எண்ணியவனுக்கு நாம் சகல காரியங்களையும் இலகுவாக்குவோம்.''

என்று குறிப்பிடுகிறான் வல்ல நாயன்.

உதாரணமாகச் சக்திவான் ஒருவனை எடுத்துக் கொள்வோம். இவன் பலவீனனைத் தூக்கி எறிந்து அவன் எலும்புகளை நொறுக்குவது சாதாரண காரியம். இதைச் செய்வதற்காக அவன் அதிகமாகப் பிரயாசை ஒன்றும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதே போன்று அந்தச் செயலில் அவன் பொறுமையை மேற்கொள்வதும் சாதாரணக் காரியமே. அதற்காக அவன் அப்படியொன்றும் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. விரைவாகவே பொறுமையை உண்டாக்கிக் கொள்ளலாம்.

ஆனால் அந்த பலவீனனால் அப்படி இருக்க முடியாது. அவன் நிலைமை நேர்மாறானது.

பலவான், பலவீனன் ஆகிய இருவரின் குத்துச் சண்டையைப் போல் தான் மத உணர்ச்சிக்கும் காம உணர்ச்சிக்குமிடையில் குத்துச் சண்டை நடைபெறும். இந்தக் குத்துச் சண்டையை அமரருக்கும் ஷைத்தானுக்கு மிடையில் நடைபெறும் உரிமைச் சண்டை என்றும் குறிப்பிடலாம். உண்மையில் அது அமரருக்கும் ஷைத்தானுக்கும் இடையில் நிகழும் போர் தான். இதில் சந்தேகமே கிடையாது.



காம உணர்ச்சி சோர்வடையும் போது மத உணர்ச்சி வெற்றி காணுகிறது; ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுகிறது. இதனால் பொறுமையை மேற்கொண்டு நடப்பது எளிதாகிறது.

இந்தப் பொறுமை நீடிக்கும் போது தனித் தன்மையொன்றும் உதயமாகிறது. அதற்கொப்ப இறைவனின் தீர்ப்புகளைச் சிரமேற்கொள்ளும் தன்மையைப் பற்றி அதிகமாக இப்போது விவரிக்க முடியாது. அதை ''இறைவிருப்பம்'' என்ற நூலில் போதிய அளவு விவரித்திருக்கிறேன். அதில் பார்த்து அறிந்து கொள்!

இந்தத் தன்மை பொறுமையைவிட உயர்ந்தது : பொறுமையின் கனி. ஆகவே தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

''உன் விருப்பத்திற்கொப்ப இறைவனை வணங்கு. அதற்குப் போதிய ஆற்றல் உன்னிடமில்லையாயின் நீ விரும்பாதவை நிகழும் போது பொறுமையோடிரு. இதில் அதிகமான நன்மை உண்டு''.

அறிஞர்களில் சிலர் கூறினார்கள் :

''பொறுமையில் மூன்று படித்தரங்கள் உள்ளன: முந்தியது, முறையீட்டை விடுவது. இது பாவ மன்னிப்புப் பெற்று வெற்றியடைந்தவர்களின் படித்தரம்.

இரண்டாவது இறைவனின் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொள்வது. இது துறவறத்தை மேற்கொண்டவர்களின் படித்தரம். மூன்றாவது, தன் நாயன் செய்யும் அனைத்தையும் விரும்புவது. இது இறையண்மையைப் பெற்ற உத்தமர்களின் படித்தரம்.''

இந்தக் கடைசிப் படித்தரம் உயர்ந்தது தான். ஆனால் இதைவிட உயர்ந்த ஒரு படித்தரம் உண்டு. இறை காதல் என்பது எல்லாவற்றையும் விட உயர்ந்ததாகும். இதை 'இறை காதல்' என்ற நூலில் விவரித்திருக்கிறேன்.

மேற்குறிப்பிட்ட வகைகள் அனைத்தும் இன்னலிலும் துன்பத்திலும் நிலவும் பொறமையில் தான் ஏற்பட முடியும்.

இவற்றைத் தவிர்த்து சில சமயங்களில், கடமையை நிறைவேற்றுவதில் - கூடாதவற்றைத் தவிர்ப்பதில் பொறுமை ஏற்படுவதுண்டு. ஹராமானவற்றைச் செய்யாமல் மனத்தைத் தடுக்கப் பொறுமை பயன்படும். நன்மையை - கடமையைச் செய்து முடிப்பதிலும் பொறுமை தேவைப்படுகிறது.

ஆக, பொறுமையின் ஒவ்வோர் அங்கத்தையும் விவரிப்பது சாத்தியமில்லை. மார்க்கத்தில் பொறுமை முக்கிய இடம் பெற்றுவிட்டது. அதிலேயே உன் கவனம் எப்பொழுதும் இருக்க வேண்டும். அப்போது தான் உன் பொறுமை, உன் ஈமானில் பாதியாக மாறும்.

ஆனால், இன்னொரு விஷயத்தையும் நினைவில் வைத்துக் கொள். பொறுமை என்ற பெயரில் நிகழும் எல்லாம் புகழுக்குரியவை என்று எண்ணிவிடாதே. சில சமயங்களில் பொறுமையோடிருப்பது ஹராமும் ஆகும். எனவே, இங்கு நான் குறிப்பிட்டதெல்லாம் குறிப்பான சில பொறுமைகளைத் தான். அவற்றிற்குத் தான் மகத்துவமும் சிறப்புமுண்டு.

# 6. பொறுமையின் தேவை

ஒரு மனிதனின் வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் சில அவன் விரும்பியவை, எதிர்பார்த்தவை. வேறு சில அவன் விரும்பாதவை, நடக்கக் கூடாது என்று எண்ணியவை.

எப்படிப் பார்த்தாலும் ஒரு மனிதன் பொறுமையின் தேவையே இல்லாமல் இருந்து விட முடியாது. ஒரு சமயம் இல்லாவிட்டாலும் மறுசமயம் அவனுக்குப் பொறுமையைக் கையாளவேண்டிய அவசியம் ஏற்படுவது திண்ணம்.

அறிந்து கொள்! மனிதனுக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அவன் விருப்பதிற்கொத்தது.
2. அவன் விரும்பாதது.

முதல் வகையைப் பற்றி ஒன்றும் எழுதத் தேவையில்லை. காரியம் மனம் போல் நிறைவேறிய பிறகு அதில் பொறுமைக்கு இடமில்லை.

இப்பொழுது இரண்டாவது வகையைப் பார்ப்போம்.

ஒரு மனிதன் விரும்பாதது - வெறுப்பது அவன் வாழ்க்கையில் நடக்கும்போது அவனால் என்ன செய்ய முடியும்? ஆம், பொறுமையாக இருப்பதைத் தவிர்த்து வேறு ஒன்றும் செய்ய முடியாது. இப்படி எண்ணத்திற்கு எதிராக நடைபெறும் காரியங்கள் ஒவ்வொன்றிலும் அவன் பொறுமையை மேற்கொள்வது அவசியமாகும்; அறிவுடைமையாகும். மனிதனின் வாழ்க்கையே இந்த இரண்டு வகைகளிலும் கட்டுப்பட்டு விடுகிறது.

இப்போது அவ்விரு வகைகளையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

முதல் வகை : மனிதனின் விருப்பம் போல் நடைபெறும் காரியங்கள், ஆரோக்கியம், செல்வம், பதவி, பணம், முதலியவை இதற்கு உதாரணங்கள். இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். இவை கிடைக்கும் போது பொறுமையை மேற்கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது. ஒரு வேளை இவற்றை அடைவதற்காகப் பொறுமையைக் கையாள நேரிடலாம். என்றாலும் அவற்றை அடைந்த பிறகு பொறுமைக்கு இடமே இல்லை. நீதான் சொல்லேன், இவற்றில் எப்படித்தான் பொறுமையை மேற்கொள்ள முடியும்?

இது பொதுவான மானிடர்களின் நிலைமை. ஆனால் இறையண்மையைப் பெற்றவர்கள் இவற்றிலும் கூடப் பொறுமைக்கு இடமளிக்கிறார்கள் ; இவற்றின் மேலுள்ள மோகத்தைக் குறைக்கிறார்கள்.

ஏனெனில், ஒருவன் இவற்றில் மூழ்கி, இதே இன்பத்தில் அவன் லயிக்கும் போது அவன் உள்ளத்தில் திமிர், பெருமை, மோசடி, வஞ்சகம் முதலிய கொடிய செயல்களின் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கிறது. இதன் பொருட்டால் அவன் பின்னர் மோசக்காரனாக - வஞ்சகனாக மாறுவதும் இயற்கையாகி விடுகிறது.

ஏனென்றால், மனிதன் சுயநலத்திற்காக மோசம் செய்யும் மனப்பான்மை உள்ளவன்.

சில அறிஞர்கள் சொன்னார்கள் :

''முஃமின்கள் இன்னலில் பொறுமையைக் கையாள்வார்கள். ஆனால் இறையண்மையைப் பெற்ற உத்தமர்கள் இன்பத்திலும் பொறுமையை மேற்கொள்வார்கள்.''



சஹல் (ரலி) அவர்கள் கூறினார்கள் :

''ஆரோக்கியத்தில் பொறுமையை மேற்கொள்வது, இன்னலில் பொறுமையை மேற்கொள்வதை விட மிகவும் கடினமாகும்.''

இந்தப் பிரச்சினை இப்படியே இருக்கட்டும். மார்க்கத்தில் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கும் நபி (ஸல்) தோழர்களை எடுத்துக் கொள்வோம். அவர்கள் இன்பத்தில் நிலவும் பொறுமையைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று ஆராய்வோம்.

நபி (ஸல்) தோழர்கள் மாநில வாழ்க்கையையும் மறுமையின் வாழ்க்கையையும் எடைபோட்டுப் பார்த்தார்கள். அவர்கள் செய்த முடிவு என்ன தெரியுமா?

இது தான் அவர்கள் செய்த முடிவு .

''நாங்கள் இன்னலில் சோதிக்கப்பட்டோம்; பொறுமையோடு இருந்தோம். ஆனால் நாங்கள் இன்பத்தில் சோதிக்கப்பட்டபோது பொறுமையை இழந்துவிட்டோம்''.

இதன் காரணமாகத்தான் இறைவன் பொருள், மனைவி, மக்கள் ஆகியவைகளால் ஏற்படும் விளைவை எச்சரிக்கிறான்.

'முஃமின்களே! உங்கள் பொருள், உங்கள் குழந்தை ஆகியவற்றில் மூழ்கி இறை தியானத்தை மறந்து விடாதீர்கள்.''

மீண்டும் கூறுகிறான் :

''உங்கள் மனைவி மக்களிலே உங்கள் விரோதி ஒளிந்து கொண்டிருக்கிறான். எனவே அவர்கள் விஷயத்தில் கவனமாய் இருங்கள்.''

திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''ஒரு மனிதனை அவன் குழந்தைதான் கோழை யாகவும் கஞ்சனாகவும் மாற்றுகிறது.''

இவற்றிலெல்லாம் நுண்ணிய அறிவுடையவர் களுக்குப் போதிய பாடமுண்டு. சுருங்கச் சொன்னால் ஆரோக்கியத்தில் பொறுமையைக் கையாண்டு காம உணர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைப்பவனே சிறந்த மனிதன் எனலாம். ஏனெனில் ஆரோக்கியத்தில் தான் பாவத்தின் காற்று அதிகமாக வீசும். அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்பவனே உண்மையான பொறுமைசாலி; ஆரோக்கி யத்தில் மிதந்து அறிவை இழக்காமலிருப்பதே அவன் கடமை.

இறைவன் மனிதனுக்கு அளித்தவற்றை நியாயத்தோடு செலவிட வேண்டும். அவன் ஆரோக்கியத்தையும் செல்வத் தையும் அளித்தான் என்பதால் அவற்றை துஷ்பிரயோகம் செய்வதோ அவற்றில் மூழ்கி வல்லவனை மறப்பதோ கூடாது. ஆனந்தம், இன்பம், விளையாட்டு ஆகியவைகளில் லயித்துக் கடமையை மறப்பது அறிவுடைய எந்த மனித னுக்கும் அழகல்ல.

இறைவன் நமக்கென்று ஏற்படுத்தியுள்ள கடமைகளைக் கவனிக்க வேண்டும். நம் ஆரோக்கியத்தை இறை வணக்கத்தில் செலவிட வேண்டும். நம் நாவை உண்மை யான விஷயத்தில் - நன்மையான காரியத்தில் பயன்படுத்த வேண்டும்.

இப்படியே, இறைவனால் நமக்களிப்பட்ட ஒவ்வொன் றையும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இத்த கைய பொறுமைக்கு 'நன்றி' என்ற புதியதொரு பெயரும் கிடைக்கிறது. ஆனால், நன்றியின் உயர் பதவியை அடைய அநேக செயல் முறைகள் உள்ளன. அவற்றை எல்லாம் பின்னர் விவரிப்பேன் - இன்ஷா அல்லாஹ்



''இன்பத்தில் பொறுமையைக் கையாள்வது கடினம்'' என்று நான் குறிப்பிட்டேனல்லவா? ''அது ஏன் அப்படி?'' என்று நீ கேட்கிறாய். இதோ பதில் தருகிறேன்.

பொறுமை, சக்தியோடு இணைகிறது. பொறுமைக்குப் போதிய சக்தி வேண்டும். ஆனால் இன்பத்தில் அந்த அள விற்குச் சக்தி கிடைப்பதில்லை.

ஆகாரமில்லாத ஒருவன் பசியைப் பொறுத்திருக்கலாம்; அதிசயமல்ல. அவன் பொறுத்துத் தான் ஆக வேண்டும். ஆனால், அறுசுவை உண்டி அவன் எதிரில் காத்துக் கொண்டி ருக்கும் போது அவனால் பசியைப் பொறுத்திருப்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. முன்னர் அவனிடமிருந்த சக்தி திடீரென்று குறையவே, பொறுமை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது.

இதனால் தான் இன்பத்தில் பொறுமையோடிருப்பது சிரமம் என்று கூறினேன். அதே சமயத்தில் அது மிகவும் சிறந்தது என்பதையும் மறுக்க முடியாது.

# பராக்கிரமம்

## 7. விரும்பாதது நடந்தால்..?

இதுவரை முதல் வகையை ஆராய்ந்தோம் இப்போது இரண்டாம் வகையை ஆராய்வோம்.

இரண்டாம் வகை : மனிதனின் விருப்பத்திற்கு எதிராக நடைபெறும் காரியங்கள். இவற்றில் தான் ஒவ்வொரு மனிதனும் பொறுமையை நாட வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இந்த வகையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. மனிதனின் உரிமைக்கும், ஆற்றலுக்கும் உட்பட்டவை. இறைவணக்கம் முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். பொதுவாக வணக்கத்தை மனித உள்ளம் விரும்புவதில்லை.

2. மனிதனின் உரிமைக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்டவை. இன்னல், பிணி முதலியவை இதற்கு உதாரணங்கள். இவற்றை உண்டாகாமல் தடுப்பது மனிதனின் ஆற்றலை விட்டும் அப்பாற்பட்டது. இன்பம் என்று ஒன்று இருக்கும் வரை அதற்கு எதிராகத் துன்பம் அல்லது இன்னல் என்று ஒன்று இருக்கத்தான் செய்யும்.

3. மனிதனின் உரிமையை விட்டு அப்பாற்பட்டவை. ஆனால் அவற்றினால் ஏற்பட்ட மன வெதும்பலைத் தணித்துக் கொள்வது உரிமையில் பட்டதே. தன் விரோதியை வஞ்சம் தீர்த்துக் கொள்வதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். விரோதம் ஏற்பட்டதில் அவனுக்கு உரிமை கிடையாது. அவனுடைய உரிமையோ ஆற்றலோ சம்பந்தப்படாமல்



அது ஏற்பட்டுவிட்டது. அனால் அந்த மனக்கறையைப் போக்குவது உரிமையில் பட்டது தான்.

இப்போது இம்மூன்று பிரிவுகளையும் விரிவாகப் பார்ப்போம்.

முதற் பிரிவு : மனிதனின் உரிமையில் - அவன் ஆற்றலில் கட்டுப்பட்டவை. இறை வழிபாடுகள் அனைத்தையும் இறை முரண்பாடுகள் யாவற்றையும் இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இறை வழிபாடு என்றதும் பொதுவாக மனிதனின் மனம் வெருளுகிறது ; அடிபணிய மறுக்கிறது. தனிக் காட்டரசனாக வாழ வேண்டும் என்பது அதன் எண்ணம் ; தன் நாயனுக்குக் கூட அடி பணிவதை அது விரும்புவதில்லை. எனவே அதை இறைவழிப்பாட்டில் ஈடுபடுத்துவதற்குப் பொறுமை அவசியமாகும்.

பொறுமைக்கு நான் முன்னர் கூறிய பொருளை மறந்து விடாதே! அதை நினைவில் வைத்துக் கொண்டால் தான் போகப் போக உன்னால் விஷயத்தை உணர்ந்து கொள்ள முடியும். இல்லையேல் செவிடன் காதில் சங்கு ஊதிய மாதிரித்தான்.

சில அறிஞர்கள் கூறினார்கள் :

''அன்று ஒரு சமயம் பிர்அவ்ன் கூறினான் : நான் தான் இறைவன் என்று . அதை அவன் பகிரங்கமாகவே கூறினான். ஆனால் அதே எண்ணத்தை ஒவ்வொரு மனிதனும் தன் மனத்தில் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான்.''

பிர்அவ்ன் அந்த எண்ணத்தை வெளியிடுவதற்குச் சரியான சந்தர்ப்பத்தையும் பெற்றிருந்தான். அவனை அவனது சமூகத்தவர் இழிவாக எண்ணத் தொடங்கிய போது தான் அவன் அந்தத் தந்திரத்தைத் கையாண்டான். மக்கள் -

அதாவது சிலர் பின்பற்றினார்கள் அவனை. ஒவ்வொரு தலைவனும் தனக்குக் கீழுள்ள மக்களுக்கு மத்தியில் தனக்கு விசேஷ ஆற்றல் உண்டு என்று காட்டிக் கொள்வது இயற்கை அதன்படி பிர்அவ்னும் செயலாற்றினான்.

போகட்டும் ; விஷயத்திற்கு வருவோம்.

மேற்குறிப்பிட்ட வணக்கங்களில் - இறை வழிபாடுகளில் சில, சோம்பேறித்தனத்தால் விடப்படுகின்றன. இதற்குத் தொழுகை ஓர் உதாரணம். சோம்பேறித்தனம் காரணமாமகவே தொழுகையை மனிதன் வெறுக்கிறான்.

இன்னும் சில, கஞ்சத்தனத்தால் ஒதுக்கப்படுகின்றன. ஜகாத் இதற்கு உதாரணமாகும். இன்னும் சிலவற்றில் இந்த இரண்டு காரணங்களுமே ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன. இதற்கு மக்கா யாத்திரை உதாரணமாகும்.

இத்தகைய வழிபாடுகளில் பொறுமையைக் கைக் கொண்டு செயலாற்றுவது மிகவும் சிரமம் தான். இது போன்ற காரியங்களில் மூன்று சமயங்களில் பொறுமை தேவைப்படும் ;

1. செயலாற்றுவதற்கு முன்னர் இந்தப் பொறுமையால் வணக்கத்திற்குரிய உள்ளமும் தெளிந்த மனோ நிலையும் ஏற்படுவதற்கு வழி ஏற்படும்; இதனால் நல்ல எண்ணம் - திடம் உண்டாகும்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் :

''எல்லாச் செயல்களும் எண்ணங்களைப் பொறுத்தவை .''

இறைவன் கூறுகிறான் :

''அவர்கள் தெளிந்த உள்ளத்தோடு வணங்க வேண்டும் என்றே பணிக்கப்பட்டார்கள்.''



இம்முறையில் இறைவணக்கத்திற்கு முந்தியே பொறுமை இடம் பற்றிக் கொண்டு விடுகிறது. அந்த வணக்கத்திற்குக் கூட உதவி வேண்டியிருக்கிறதல்லவா?

2. செயலாற்றும் போது இரண்டாம் தடவையாகப் பொறுமை தேவைப்படுகிறது. இதனால் வணக்கத்தின் மத்தியில் சோம்பேறித்தனமோ, கெட்ட ஊசலாட்டங்களோ ஏற்படாதவாறு தடுக்கப்படுகிறது. அந்த வணக்கம் முடியும் வரை பொறுமை அவசியமாகும்.

3. செயலாற்றப்பட்ட பிறகு மூன்றாவது தடவையாகப் பொறுமை தேவைப்படுகிறது. இதனால் தான் செய்த நன்மையைப் பிறரிடம் கூறிப் பெருமைப்படும் மனப்பான்மை மாறுகிறது. இப்படிப் பெருமையடிப்பதால் தான் பெரும்பாலான நன்மைகள் அழிந்து போகின்றன. ஒருவன் செய்த நன்மையைப் பிறரிடம் சொன்னானாகில், அவன் நன்மை வீணாகிறது. பெருமையின் விஷம் அதை வீணாக்கி விடுகிறது.

வழிபாடுகள் பர்ல், நபில், என்ற இரு வகைகளில் கட்டுப்படுகின்றன. இவ்விரு வகைகளுக்கும் பொறுமை அத்தியாவசியமாகும்.

இதுவரை வழிபாடுகளைப் பார்த்தோமல்லவா? இப்போது இறை முரண்பாடுகளைப் பார்ப்போம்.

இறை முரண்பாடு பலதரப்படுகின்றன. அவற்றிலெல்லாம் பொறுமையின் உதவியால் தான் விலகியிருக்க முடியும்.

சாதாரணமாக நாம் அடிக்கடி ஒரு பாவத்தைச் செய்யலாம். ஆனால் அதைப் பொறுமையால் அடக்குவது சற்று சிரமமான காரியம் தான். நாம் அடிக்கடிச் செய்யும் காரியமா

யிருப்பதால் அதில் பொறுமையை மேற்கொள்வதே தண்டனையைப் போலிருக்கும்.

புறம் பேசுதல், பொய்யுரைத்தல், தற்பெருமை யாடுதல் முதலியவை இதற்கு உதாரணங்கள். இன்னும் பிறர் உள்ளம் புண்படும்படிக் கிண்டல் செய்வது, இறந்தவர்கள் குறித்து அவதூறு பேசுவது, அவர்களின் நடை, உடையைப் பற்றி இழித்துரைப்பது முதலியவைகளும் இதே இனத்தைச் சேருகின்றன.

இவையாவும் சாதாரணமாக மக்கள் செய்யும் குற்றங்கள்.

பிறரைப் பற்றி அவதூறு பேசுவதில் இரண்டு குணங்கள் மறைந்து கிடக்கின்றன. ஒன்று, பிறரின் குணத்தை அம்பலப்படுத்தி கண்ணியச் சிதைவை உண்டாக்குவது; மற்றொன்று தன்னை மறைமுகமாகப் புகழ்வது.

இந்த இரண்டு எண்ணமும் சேர்ந்து மனிதனின் நாவை இஷ்டப்படி யெல்லாம் திருப்பும்.

பலர் சேர்ந்து உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருக்கும் போது உன்னால் மட்டும் விலகியோட முடியாது.

எவனாவது ஒருவன் பட்டுத்துணியை அணிந்து கொண்டு அந்த வழியே போவான். அவனை அந்தக் கூட்டத்திலுள்ள ஒருவன் பார்த்துவிடுவான். அவ்வளவு தான் ; உரையாடல் திக்குத் திரும்பிவிடும். பட்டு அணிவது எவ்வளவு பெரிய குற்றம் என்று ஒவ்வொரு மனிதனும் விளக்க ஆரம்பித்து விடுவான். ஆனால்,

''புறம் பேசுவது விபசாரம் செய்வதை விடப் பெரிய குற்றம்.''

என்ற நபி (ஸல்) கருத்தை அவர்கள் எண்ணியும் பார்க்க மாட்டார்கள்.



இது போன்ற கூட்டத்தில் நீ மாட்டிக் கொண்டால் நீயும் அவர்களோடு கூத்தாட வேண்டியது தான்.

ஆம், அவர்களில் ஒருவன் புறம் பேசுவதை விரும்பவில்லை என்று வைத்துக் கொள். ஆனால், தன் சகாக்களோடு சேரும்போது அவனால் தன் நாவையும் கட்டுப்படுத்த முடியவில்லை என்று வைத்துக் கொள்; இவ்விதமானவன் அந்தக் கூட்டத்தை விட்டே பிரிந்து விட வேண்டும். இதைத் தவிர்த்து வேறொன்றும் செய்வதற்கில்லை. தனிமையில் பொறுமையைக் கையாள்வது, அந்தக் கூட்டத்தின் மத்தியில் உட்கார்ந்து கொண்டு பொறுமையைக் கையாள்வதைவிட இலகுவான தாகும்.

எப்படிப் பார்த்தாலும் இதுபோன்ற சமயங்களில் பொறுமையை மேற்கொள்வதற்கு அசையாத மனோ திடமும்; கலங்காத சித்தமும் வேண்டும்.

இது இப்படி இருக்க, வேறு சில பாவங்களில் பொறுமையை மேற்கொள்வது இதைவிடக் கடினமாகவோ, இதைக் காட்டிலும் இலேசாகவோ இருக்கும். இதெல்லாம் பாவத்தின் தன்மையைப் பொறுத்த விஷயம்.

ஒரு மனிதன் பெரியதொரு குற்றத்தைச் செய்ய விரும்புகிறான். அதற்குப் பணமோ, அதிகப் பலமோ தேவைப்படும். ஆனால் அவனிடம் அந்த இரண்டும் இல்லாமலிருக்கலாம். இது போன்ற சமயங்களில் எளிதாகப் பொறுமையை வரவழைத்து விடுவது சாத்தியமே.

# 8. மனிதனால் தடுக்க முடியாதவை

இப்போது இரண்டாம் பிரிவுக்கு வருவோம்.

இரண்டாம் பிரிவு: மனிதனின் உரிமைக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டவை. உலகிலுள்ள சகல இன்னல்களும், துன்பங்களும் இதற்கு உதாரணங்கள். இவற்றை அணுகவிடாமல் தடுப்பதும் மனிதனின் சக்தியைவிட்டு அப்பாற்பட்ட விஷயம்.

கண்ணியம் சிதைவது, செல்வம் சூறையாடப்படுவது, ஆரோக்கியம் குறைவது, கண்ணின் பார்வை மங்குவது, அங்கவீனம் ஏற்படுவது முதலியவற்றை இந்தப் பிரிவில் சேர்க்கலாம். இவற்றில் பொறுமையை மேற்கொள்வது மிகவும் சிறந்தது ; உயர்ந்தது. பொறுமையின் படித்தரங்களில் மிகவும் உயர்ந்தவற்றில் இதுவும் ஒன்றாகும்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள் :

''குர் ஆனில் பொறுமை மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. முதலாவதாய்க் கடமையை நிறைவேற்றும் பொறுமை; உறுதி. இதற்கு முந்நூறு நன்மைகள் உள்ளன. இரண்டாவது, கூடாதவற்றை விட்டு விலகுவதில் பொறுமையை மேற்கொள்வது. இதற்கு அறுநூறு நன்மைகள் அளிக்கப்படும். மூன்றாவது இன்னலில் பொறுமையைக் கடைப்பிடிப்பது. இதற்கு தொள்ளாயிரம் நன்மைகள் கொடுக்கப்படும்.''

இதிலிருந்து கடைசிப் பிரிவு தான் மிகவும் மேலானது என்று தெரிகிறது. அதனால் தான் அதற்குத் தொள்ளாயிரம்



நன்மைகள் அளிக்கப்படுகின்றன. அதற்கு முந்திய இரண்டும் அடுத்தபடியாகத் தான் சிறப்பெய்துகின்றன.

''இதற்கு காரணம் என்ன?'' என்று தானே கேட்கிறாய்!

இதோ சொல்கிறேன். மூஃமினாகிய ஒவ்வொரு மனிதனிடமும் பொறுமைக் குணமுண்டு. அவனால் நன்மையைச் செய்வதிலும், பாவத்தை விடுவதிலும் பொறுமையை எடுத்தாள முடியும். ஆனால் இன்னலில் பொறுமையோடிருக்கும் மனப்பான்மை எல்லோரிடமும் இருக்காது. மிகச் சிலரே அந்தப் பேற்றைப் பெற்றிருப்பார்கள். ஏனெனில், இந்தப் பொறுமை உள்ளத்தைப் பாதிக்க வல்லது.

எனவே தான் நபி (ஸல்) அவர்கள் :

''இறைவா ! இன்னலில் பொறுமையை மேற்கொள்ளும் அளவிற்கு என் உள்ளத்திடத்தை அதிகப்படுத்துவாயாக!'' என்று இறைஞ்சினார்கள்.

இது மேலானது. இதன் அடிப்படை அசையாத உறுதி ; ஆடாத திண்மை.

அபூசுலைமான் என்ற அறிஞர் கூறினார் :

''இறைவன் மீது ஆணையாகச் சொல்கிறேன் ; நாங்கள் விரும்புபவை நிகழும் போது எங்களால் பொறுமையோடிருக்க முடியவில்லை. அப்படியிருக்க, நாங்கள் வெறுப்பவை நிகழும் போது எங்களால் எப்படிப் பொறுமையை மேற்கொள்ள முடியும்?''

திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

'இறைவன் கூறுகிறான் : ''நான் ஓர் அடிமையைப் பிணியால் - இன்னலால் சோதிக்கும் போது அவன் அதைப்

பொறுத்துக் கொண்டால் நான் கண்டிப்பாக அவனுடைய பிணியை - இன்னலை மாற்றி விடுவேன்'என்று.

இன்னும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

''இறைவன் கூறினான் : 'என்னால் சோதிக்கப்படும் அடிமை ஒருவன் அதைப் பொறுத்துக் கொண்டால், அவன் பிணியைப் போக்கிவிடுவேன். அவன் உடலை உயர்ந்ததாகவும் உதிரத்தைப் புனிதமானதாகவும் மாற்றிவிடுவேன். அவன் மரணித்தால், என் அன்புக் கரத்தால் அவனை வரவேற்பேன்' என்று''.

ஒரு சமயம் ஹலரத் தாவூத் (அலை) அவர்களுக்கும் இறைவனுக்குமிடையில் உரையாடல் நிகழ்ந்தது.

''இன்னலில் பொறுமையை மேற்கொண்டு நடந்து உன் அன்புக்காகக் காத்திருக்கும் அடிமைக்கு நீ எத்தகைய கூலி கொடுப்பாய்?''

என்று கேட்டார்கள் தாவூத் (அலை) அவர்கள்.

இறைவன் பதிலிறுத்தான் :

''காவல் பாடு என்ற உடையை நான் அவனுக்கு அணிவிப்பேன். பின்னர் அதை அவனிடமிருந்து நான் பறிக்கவே மாட்டேன்.''

ஒரு சமயம் உமர்பின் அப்துல் அஜீஸ் பிரசங்கம் செய்தார்கள் :

''இறைவன் மக்களுக்களித்திருக்கும் நன்மையை வரம்பிட்டுக் கூற முடியாது. அவன் செய்வது எல்லாம் நன்மையாகவே இருக்கிறது. அவன் உங்களுக்கு ஏதேனும் பேரருள் ஒன்றைக் கொடுத்திருக்கலாம். பின்னர் அதைப் பறித்துக் கொண்டு அதற்குப் பதிலாக வேறொரு அருளை அளிக்கலாம். அப்படி அளிக்கப்பட்டது. 'பொறுமை'யாக இருந்தால், அது முந்திய யாவற்றையும் விட உயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. 'பொறுமையாளர்களுக்கு அளிக்கப்படும். நற்கூலி அளவில்லாதது' என்று இறைவன் கூறுகிறான்...''



புலைல் என்ற மேதையிடம் ஒருவர் கேட்டார் :

''பொறுமை என்றால் என்ன?'

''இறைவனின் தீர்ப்புகளை அப்படியே ஏற்றுக் கொள்வது தான் பொறுமை''

- இப்படி வந்தது விடை.

இதோ உனக்குச் சுவையான விஷயம் ஒன்றைச் சொல்கிறேன் :

ஹப்ஸ் என்பவர் ஒரு பேரறிஞர். அவரிடம் ஒரு சமயம் சிலர் வந்தார்கள்.

''நீங்கள் யார்?'' என்றார் ஹப்ஸ்.

''உங்கள் நண்பர்கள்!''

இது வந்தவர்களின் விடை.

அவ்வளவு தான். மறுவினாடி ஹப்ஸ் விசித்திரமான ஒரு வேலையைச் செய்தார். அங்குக் கிடந்த கற்களை எடுத்து, வந்தவர்கள் மீது வீசினார்.

அவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். பின் என்ன; நின்று கொண்டாயிருப்பார்கள்?

அப்போது ஹப்ஸ் கூறினார் :

''எனக்கு நீங்கள் நண்பர்களாயிருந்தால் என் வேதனையை - தண்டனையைப் பொறுத்துக் கொள்ள மாட்டீர்களா?''

இது உனக்கு வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால், இதில் மறைந்து கிடக்கும் மணிமணியான கருத்துக்களை எண்ணிப்பார். இது எவ்வளவு உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதை அப்போது தான் உன்னால் உணர முடியும்.

ஒரு அறிஞர் வாழ்ந்து வந்தார் ; அவர் சிறந்த அறிஞர் என்பதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால், அவர் அடிக்கடி செய்துவந்த ஒரு செயல் விசித்திரமாயிருந்தது. திடீரென்று அவர் தம் சட்டைப்பையில் கையை விடுவார். துண்டுக் காகிதம் ஒன்றை வெளியிலெடுப்பார். அதையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருப்பார். பின்னர் அதை மறுபடியும் தம் சட்டைப்பைக்குள் வைத்துக் கொள்வார்.

அந்தத் துண்டுக்காகிதத்தில் என்ன இருக்கிறது என்று அறியச் சிலர் முனைந்தார்கள் ; அறிந்தும் விட்டார்கள்.

''உன் நாயனின் தீர்ப்பை நீ பொறுமையோடு ஏற்றுக் கொள். நாம் எப்போதும் உன்னைக் கண்காணித்து வருகிறோம்.''

– என்ற இறைவசனம் தான் அதில் இருந்தது.

ஹலரத் தாவூத் (அலை) அவர்கள் தம் புதல்வர் சுலைமான் (அலை) அவர்களுக்கு ஒரு சமயம் உபதேசம் செய்தார்கள் :

''ஒரு முஃமீனுக்கு மூன்று குணங்கள் அத்தாட்சிகள் : பெற வேண்டியவற்றில் இறை நம்பிக்கை கொள்ளுதல்; பெற்றுவிட்டவைகளில் இறைவனின் தீர்ப்பின்படி நடத்தல்; இன்னலில் பொறுமையை மேற்கொள்ளுதல்.''

ஒரு அறிஞர் தாம் கண்டவற்றைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.



''நான் ஒரு சமயம் போர்க்களத்திற்குச் சென்றேன். அப்போது அபூசாலிமைக் கண்டேன். அவர் தம் மார்பில் பாய்ந்திருந்த அம்பினால் கொடிய முறையில் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் தாகத்தோடு இருக்கிறார் என்று உணர்ந்து கொண்டேன். தண்ணீரில்லாமல் வறண்டு போன அவருடைய உதடுகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருந்தன. அவர் உயிர் இன்னும் சில வினாடிகளில் பிரிந்து விடும் என்று உணர எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவசரம் அவசரமாக என்னுடைய கேடயத்தில் தண்ணீர் கொண்டு வந்தேன். அவரருகில் அமர்ந்து ''அபூசாலிம், தண்ணீர்...'' என்று சொல்ல ஆரம்பித்தேன்.

அவர் குறுக்கிட்டார் : ''தண்ணீரா ! எனக்கு வேண்டாம். எனக்குத் தாகமாகத் தானிருக்கிறது. ஆனால் நான் நோன்பு பிடித்திருக்கிறேன். இரவுவரை நான் உயிரோடிருந்தால் அதைக் குடிக்கிறேன்.. அதை அங்கேயே வையும்'' இப்படிப் பதிலளித்தார் அபூசாலிம்.''

இத்தனை பயங்கர நிலைமையிலும் அவர் பொறுமையைக் கைவிடவில்லை. அறநெறியில் நடக்கும் உத்தமர்களின் பாதை இதுதான். இதன் மகிமையை அனுபவித்தாலொழிய நன்கு உணர முடியாது.

தன் இன்னலையும், துயரத்தையும் பிறரிடம் கூறி மன அமைதி பெறுவது மனிதனின் இயல்பு. இந்த இயல்பு பொதுவாக எல்லோரிடமும் உண்டு: பிறரிடம் கூறி ஒப்பாரி வைத்தல், மனம் வெதும்பி அன்னியரிடம் அழுதல் முதலியவை இதே வகையில் உள்ளவை. இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும்; ஏனெனில் இவை பொறுமைக்கு உலை வைத்து விடுகின்றன.

ஆனால், உள்ளத்தில் கவலை ஏற்படுவதாலோ, இறந்தவர்கள் குறித்து எண்ணியதால் கண்ணீர் பெருகுவதாலோ குற்றமில்லை ; பொறுமைக்குப் பாதகமில்லை. இவையாவும் மனிதனின் இயற்கையில் கட்டுப்பட்டவை. இயற்கையை அடக்கியாள்வது பொறுமையின் நோக்கமல்ல.

சிலர் என்னதான் துயரம் ஏற்பட்டாலும் மனோ உறுதியுடன் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

திரு நபி (ஸல்) அவர்களின் புதல்வர் இப்றாஹீம் இறந்த போது அவர்களின் கண்கள் கண்ணீரைப் பொழிந்தன.

''இது விலக்கப்பட்ட விஷயமாயிற்றே!'' என்றார் ஒரு நண்பர்.

''இது அன்பின் அறிகுறி'' என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இதெல்லாம் பொறுமைக்கு இடையூறு உண்டாக்காது.

# 9. பழிக்குப் பழி!

இப்போது மூன்றாவது பிரிவிற்கு வருவோம்.

மூன்றாவது பிரிவு, மனிதனின் உரிமையை விட்டு அப்பாற்பட்டவை. ஆனால், அவற்றினால் ஏற்பட்ட மன வெதும்பலைத் தணித்துக் கொள்வது உரிமையில் ஆற்றலில் அடங்கியதே.

உதாரணமாக உனக்கு யாரேனும் ஒருவன் தீங்கிழைத்திருக்கலாம். அல்லது உன் மனம் புண்படும்படி ஏதாவது பேசியிருக்கலாம். அல்லது உன் பொருளைத் திருடி உனக்குக் குறைவை உண்டாக்கியிருக்கலாம். இவையாவும் உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை. ஆனால் இவற்றினால் ஏற்பட்ட குறைவைத் தீர்த்துக் கொள்வது உன் உரிமையில் பட்டதே; உன் ஆற்றலில் அடங்கியதே. அப்படி நீ பகரம் வாங்குவது - பழிக்குப் பழி வாங்குவது மார்க்கத்தில் அனுமதிக்கப் பெற்றதேயாகும்.

ஆனால், இவற்றில் பொறுமையோடிருப்பது - பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்தை விடுவது மிகவும் நல்லது. இத்தகைய பொறுமை சில சமயங்களில் மிகவும் அவசியமாக இருக்கும்.

நபி (ஸல்) தோழர்களில் சிலர் கூறினார்கள் :

''ஒரு மனிதன் தனக்கேற்படும் வேதனைகளைப் பொறுத்துக் கொள்ளவில்லையாயின் அவனுடைய ஈமானை ஈமானென்றே சொல்லமுடியாது.''

''நீங்கள் எங்களுக்கு அளிக்கும் அநியாயத்தையும், துன்பங்களையும் நாங்கள் கண்டிப்பாய்ப் பொறுத்துக் கொள்வோம். இறை நம்பிக்கையாளர்கள் இறைவன் மீதே நம்பிக்கை கொள்வார்கள்.''

என்று முஸ்லீம்களின் மனப்போக்கை விவரிக்கிறது திருமறை.

ஒரு சமயம் திரு நபி (ஸல்) அவர்கள் கொஞ்சம் திரவியங்களைப் பங்கு போட்டு முஸ்லிம்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஒருவர் கூறினார் :

''இது அநியாயம்! சில பாகங்கள் அதிகமாகவும், வேறு சில பாகங்கள் குறைவாகவும் இருக்கின்றன.''

அவர் ஒரு காட்டரபி. எனவே காட்டுத்தனமாய் உளறி விட்டார்.

நபியவர்களின் வதனம் சிவந்தது. கண்களும் சிவந்தன. ஆனால் மறுவினாடியே அவர்கள் கோபத்தை விரட்டி னார்கள்; பொறுமையைக் கையாண்டார்கள்.

''இறைவன் என் சகோதரர் மூஸா (அலை) க்கு அருள் பாலிக்கட்டும். இதைவிடக் கொடிய முறையில் அவர் துன்பு றுத்தப்பட்டார். இருந்தும் அவர் பொறுத்துக் கொண்டார்.''

என்று பகர்ந்தார்கள்.

இறைவன் திரு நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறுகிறான் :

''அவர்கள், உமக்கிழைத்த தீங்குகளை விட்டு விட்டு இறைவனை நம்பும். அவன் உமக்குப் போதுமானவன். அவர்கள் என்ன சொன்னாலும் பொறுத்துக் கொள்ளும்; அவர்களை வெறுத்துவிடும்.''



இன்னும் கூறுகிறான் நாயன்.

''மக்காவின் காபிர்கள் உம்மீது வீசும் சொல்லம்புகளால் உமது உள்ளம் சுருங்குகிறது என்பதை நாம் அறிகிறோம். உமது இறைவனைப் புகழும்''.

மேலும் கூறுகிறான் :

''வேதம் அருளப்பட்டவர்களிடமிருந்தும், இணை வைப் போரிடமிருந்தும் நீர் வேதனை தரும் வார்த்தைகளைக் கேட்க நேரிடும். ஆனால் பொறுமையை இழக்காதீர்கள் !''

மேலும் இறைவன் கூறுகிறான் :

''அவர்கள் எப்படி உங்களை வேதனைப் படுத்தினார் களோ அப்படியே நீங்களும் அவர்களை வேதனைப் படுத்துங் கள். ஆனால் பொறுமையை மேற்கொண்டு, பழிக்குப் பழி வாங்குவதை விடுவது உங்களுக்கு நல்லது''.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள் :

''உன்னை ஒதுக்கியவனிடம் நெருங்கு, உன்னை வஞ்சித்தவனை மன்னித்து விடு''.

நபி ஈஸா (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள் தங்கள் சமூகத்தவருக்கு :

''ஒருவன் உங்கள் பல்லை உடைத்தால் அவன் பல்லை நீங்கள் உடைக்கலாம் என்றும், ஒருவன் உங்கள் மூக்கை நொறுக்கினால் அவனுடைய மூக்கை நீங்கள் பதம் பார்க்க லாம் என்றும் உங்களுக்கு சட்டமிருந்தது. இப்போது நான் சொல்கிறேன், கேளுங்கள் : தின்மையை ஒருவன் செய்தான் என்பதால் அதே தின்மையை நீங்களும் செய்ய வேண்டாம்.

உங்கள் வலது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் அவனுக்கு உங்கள் இடது கன்னத்தையும் திருப்பிக் கொடுங்கள்..''

இவையாவும் கஷ்டத்தில் பொறுமையை மேற்கொள் ளும் முறைகள். மக்களால் அளிக்கப்படும் துன்பங்களில் பொறுமையோடிருப்பது சிரமமானது ; சிறந்தது. இப்பொ றுமை காம உணர்ச்சியையும் சின உணர்ச்சியையும் நசுக்கும் தன்மையுடையது.

இதுவரை நான் குறிப்பிட்ட சில வகைகளிலிருந்து பொறுமையைக் கையாள்வது எல்லா நேரங்களிலும் கடமை என்பதை நீ உணர்ந்து கொண்டு விட்டாய்.

மனத்தைத் தீய உணர்ச்சியிலிருந்து காத்துக் கொண் டால் தான் உன்னால் பொறுமையை மேற்கொள்ள முடியும். இல்லையேல் நீ பொறுமையோடிருப்பது குதிரைக் கொம்பு தான். உன் நாயனின் நினைவை எப்போதும் மனத்தில் இருத்த வேண்டும். அவனை நீ ஒரு வினாடி மறந்தாலும் போதும், உன்னை ஷைத்தான் அண்டி விடுவான்.

மனப் போராட்டத்தில் உன் மத உணர்ச்சிக்கு வெற்றி கிடைக்க நீ முனையவேண்டும். இந்தப் போராட்டம் எப்போதும் நடக்கும்; அடிக்கடி நடக்கும். மரணம் என்ற சக்திக்குத் தான் அந்தப் போராட்டத்தை ஒழிக்கும் ஆற்றல் உண்டு.

இறைவன் நமக்கெல்லாம் நேர்வழி காட்டுவானாக!

# 10. வியாதிக்கு மருந்து

உலகில் வியாதி உண்டு. அதற்கு மருந்தும் உண்டு. வியாதியைப் படைத்த இறைவன் அதற்கு மருந்தையும் படைத்தான்.

பொறுமையை உண்டாக்கிக் கொள்வது சிரமமான காரியமாயிருந்தாலும் அது நடக்காத காரியமல்ல. பொறு மையை உண்டாக்குவது சாத்தியம் தான். அதற்கு ஒரு மருந்தும் உண்டு. அந்த மருந்தில் அறிவு என்ற மூலிகையும், கிரியாம்சை என்ற மூலிகையும் கலந்திருக்கின்றன. இவ்விரு மூலிகைகளும் தாம் எல்லா மனோ வியாதிகளுக்கும் நாசினி. பொறுமை பலதரப்படுவது போல் அதை வரவிடாமல் தடுக்கும் காரணங்களும் பலதரப்படுகின்றன. காரணங்கள் பலதரப்படுவதால் அதற்களிக்கப்படும் மருந்தும் பலதரப் படுகிறது.

அதை விவரிக்க முடியாது. நூல் நீண்டுவிடும். எனி னும், ஒரு சிலவற்றின் பாதையை மட்டும் காட்டுகிறேன், அதன்பொருட்டால் நீ படிப்படியாக முன்னேறலாம்.

உன் உள்ளம் காமத்தால் உந்தப்படுவதாக வைத்துக் கொள். அதை அடக்கியாள உன்னால் முடியவில்லை. அப் போது அதன் விருப்பத்திற்கொப்ப நீ நடமாடுவாய்; செய லாற்றுவாய். நீ பார்ப்பது, எண்ணுவது, பேசுவது எல்லாம் உன் காமத்தின் விருப்பப்படியே நடைபெறும். உன்னை இறை

வணக்கத்தில் ஈடுபடாதவாறு அது பார்த்துக் கொள்ளும். உன்னால் இறைவனை எண்ணியும் பார்க்க முடியாது.

இந்த நிலைமையில் நீ செய்ய வேண்டியது என்ன? இந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளுவது? மீளுவது சாத்தியமா? இல்லையா?

நான் ஆரம்பத்தில் சொன்னவற்றை இப்போது நினைவு படுத்திக் கொள். பொறுமை என்பது காம உணர்ச்சிக்கும் மத உணர்ச்சிக்குமிடையில் நடைபெறும் போரில், மத உணர்ச்சி வெற்றி பெறுவது தான் என்று நான் குறிப்பிட்டேனல்லவா?

இவ்விரு போர் வீரர்களும் ஒருவரையொருவர் வீழ்த்த முயல்வார்கள். நாம் யார் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறோமோ, அவருக்கு உற்சாக மூட்ட வேண்டும்; பலமளிக்க வேண்டும். அப்போது தான் நாம் விரும்பியது போல் நமது வீரன் வெற்றி பெற முடியும்.

இப்போது நடைபெறுவது காம உணர்ச்சி - மத உணர்ச்சிக் குத்துச் சண்டை. இதில் நமக்கு விருப்பமானவர் மத உணர்ச்சி. அவர் தான் வெற்றி பெற வேண்டும் என்பது நம் எல்லோருடையவும் அவா.

எனவே மத உணர்ச்சிக்குப் பலம் ஏற்படும்படி நாம் எல்லாக் காரியங்களையும் கவனிக்க வேண்டும். இந்தப் போராட்டத்திற்குக் குறிப்பிட்ட நேரம் கிடையாது; எந்த நேரத்திலும் இந்தப் போட்டி நடக்கும். ஆகையால் மத உணர்ச்சிக்குப் பல மேற்படும் காரியங்களை நிரந்தரமாகச் செய்து வரவேண்டும்.

நோன்பு பிடித்து உணவைக் குறைக்க வேண்டும். காமத்திற்குத் தூபம் போடும் அளவிற்கு அறுசுவை



உண்டிகளைப் புசிக்கக் கூடாது. இச்சையைத் தூண்டும் ஆபாசப் படங்களைப் பார்க்கக் கூடாது.

திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் :

''பார்வை, இப்லீஸின் அம்புகளிலேயே விஷம் கலந்த அம்பாகும் : அதை எந்தக் கேடயத்தாலும் தடுக்க முடியாது.''

ஒரு பெண்ணின் மீது இச்சை ஏற்படும் போது அதைத் தவறான வழியில் பிரயோகிக்காமல் வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால், இது எல்லோருக்கும் இலகுவான காரியமல்ல. அப்படி விவாகம் செய்து கொள்ள முடியாதவர்கள் நோன்பு பிடிக்கலாம்.

நபியவர்கள் கூறியுள்ளார்கள் :

''விவாகம் செய்து கொள்ளப் போதிய வசதி இல்லாவிடில் நோன்பு பிடியுங்கள். அது காமத்தை ஒடித்துவிடும்.''

உணவின் காரணமாகவே காமம் வளர்கிறது என்பது தெளிவு. நோன்பு பிடிக்கும் போது உணவு குறைகிறது. அதனால் காமத்தின் தாக்குதலும் குறைகிறது.

ஆடு, மாடு, ஒட்டகங்களுக்குச் சில சமயங்களில் குறிப்பான சில வியாதிகள் வருவதுண்டு; அதற்கு மருந்து ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. ஆகாரம் கொடுக்காமலிருந்தால் போதும்; அதுதான் மருந்து.

இதேபோலத்தான் காம வியாதிக்கு நோன்பு சரியான மருந்தாக அமைகிறது.

ஆக, இப்படிப் பல்வேறு முறைகளில் மத உணர்ச்சிக்கு ஊக்கமும் பலமும் அளிக்க வேண்டும். அதற்கு இரண்டு வழிகள் : தெய்வீக ஞானத்தை ஊட்ட வேண்டும். அந்த ஞானத்தின்படிச் செயலாற்ற வேண்டும்.

இவை தாம் பொறுமை உண்டாகாமல் தடுக்கும் வியாதிக்கு மருந்துகள். இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாக விளக்குவது சாத்தியமல்ல. நீயே ஆராய்ந்து அறிந்து கொள்.

இன்னொரு விஷயத்தையும் நினைவில் வைத்துக் கொள். காம உணர்ச்சிக்கும், மத உணர்ச்சிக்கு மிடையில் ஏற்படும் இப்போராட்டத்தை அறவே தடுத்து விடலாம் என்று எண்ணி விடாதே. அது நடக்காத காரியம். அந்தப் போராட்டம் நடந்து கொண்டுதானிருக்கும்; ஒரு வழியில்லாவிட்டால் மறு வழியில் யுத்தம் மூண்டு கொண்டு தானிருக்கும்.

அதைக் கட்டோடு அழிக்க - காமத்தை வேரோடு ஒழிக்க எண்ணுபவர்களுக்கு ஒரே ஒரு மார்க்கமுண்டு. அவர்கள் தங்கள் மனைவி,மக்கள், இனபந்துக்கள், பொருள், பதவி, எல்லாவற்றையும் விட்டு விட்டு எங்கேயாவது மலையுச்சிக்கோ நடுக்காட்டுக்கோ ஓட வேண்டும். அப்போது தான் அது சாத்தியம்.

ஆனால் இதை குர்ஆன் அனுமதிக்கவில்லை. உலக வாழ்க்கையை வகுத்துக் கூறும் குர்ஆன் இதை எப்படி ஆதரிக்கும்?

என்றாலும், இத்தகைய முறையைக் கையாண்டவர்கள் முழுக்க முழுக்க மாறிவிடுவார்கள். அவர்களின் எண்ணம், சிந்தனை, கருத்து எல்லாம் ஒரே புள்ளியைத் தான் வட்டமிட்டு நிற்கும். ஆம், அந்தப் புள்ளி தான் இறைவன்.

இறையெண்ணமும், தெய்வீக ஞானமும் அவர்கள் உள்ளத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் போது ஷைத்தானுக்கு அங்கு இடமேது?



இதற்குரிய விளக்கம் அதிகமுண்டு. எப்படியிருந்தாலும் இம்முறையினால் உள்ளம் கண்ணாடியாவது திண்ணம். அதில் வல்லவனின் விந்தைகளெல்லாம் பிரதிபலித்துப் பிரகாசிக்கும். இவைகளையெல்லாம் விவரிக்கப் புகுந்தால் - நீண்ட நாட்கள் விவரித்தாலும் - நூற்றில் ஒரு பாகத்தைக் கூட விளக்க முடியாது.

ஒரு மனிதனால் அடையக் கூடியதில் மிகவும் உயர்ந்தது இது தான்: இந்தப் பதவிவரை ஒரு மனிதன் தன் முயற்சியினாலும், உழைப்பினாலும் உயரலாம். இதைவிட உயர்ந்த பதவியாகிய நபித்துவம், தூதுத்துவம் முதலியவற்றை அடைவது மனிதனின் முயற்சியை விட்டு அப்பாற்பட்ட விஷயமாகும்.

இவ்வித மேதைகளின் ஞானம் பொருளாதாரத்தைப் பொறுத்து கூடுவதும் குறைவதுமுண்டு. இவர்கள் பொருளாதாரம் குறித்து வருந்தமாட்டார்கள் ; வருந்த வேண்டியது மில்லை.

''உங்கள் ஆகாரமும், உங்களுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டயாவும் விண்ணகத்தில் தான் இருக்கின்றன.''

பொருளாதாரத்தை - ஆகாரத்தைப் பற்றி இந்த அளவோடு அவர்கள் திருப்தியடைய வேண்டும். அவர்களைப் பட்டினியாக மடியும்படி இறைவன் விட்டு விட மாட்டான். அப்படி எந்தத் துறவியையும் அவன் மரணிக்க விட்டதில்லை. ஆனால் அவன் எப்போதும் ஆகாரமளிப்பான் என்று சொல்ல முடியாது. அதுவரை பொறுத்திருக்க வேண்டும்.

நாம் பூமியை ஒழுங்குபடுத்தி, வேளாண்மைக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம். வயலிலுள்ள தேவையில்லாத புற்பூண்டுகளைப் பிடுங்கி யெடுத்து நாற்று நடுவதற்கு நாம் தயாராயிருக்கலாம்.

ஆனால் இவற்றினாலெல்லாம் என்ன பயன்? மழை பெய்தால் தானே எல்லாம்? இறைவன் எப்போது மழைக்குரிய காரணங்களை உண்டாக்குவான் என்று நம்மால் சொல்ல முடியாது. எனினும் ஒவ்வொரு வருடமும் இறைவன் மழையைப் பெய்யச் செய்வான் என்று நாம் நம்புகிறோம் ; இறைவன் மீது பாரத்தைப் போடுகிறோம். அந்த நம்பிக்கை வீண்போகாது; போனதுமில்லை. அப்படி ஒரு தேசத்தில் பல்லாண்டுகளாக மழையே இல்லை என்றால், அது அந்தத் தேசமக்களுக்குத் தண்டனை என்று உணர்ந்து கொள்ளலாம்.

இதே போன்று உன் உள்ளப் பூமியைச் சுத்தப்படுத்தி அதில் இறைஞானம் என்ற நாற்றுகளை நடுவாயாக! அப்போது தான் உன் குறிக்கோளை உன்னால் அடைய முடியும்.

மேகம் சூழ்ந்த நேரத்தில் மழையை எதிர்பார்க்கலாம். அதே போன்று சிறப்பான நேரங்களில் உன் உள்ளத்தின் மீது தெய்வீக மழை பெய்வதை எதிர்பார்க்கலாம். வெள்ளிக் கிழமை, நோன்பு (ரமலான்) நாட்கள் முதலியவை சிறப்பான நேரங்களாவன. உன் மனத்திலுள்ள கவலையும், எண்ணமும் இறையருளை இழுத்து வருபவை. உன் நேர்மையான நோக்கமும் செவ்வையான குறிக்கோளும் இறையன்புக்கு நெருங்கியவை.

ஞானோதயம் உனக்கு ஏற்படுவது ஆச்சரியமல்ல. அது எப்போதும் உன்னிடம் - அதுவும் உன் உள்ளத்தில் தான்



இருக்கிறது ; ஆனால், உன் காம உணர்ச்சி குறுக்கே நின்று திரையென மறைக்கிறது; அந்தத் திரையை நீ கிழித்தெறிய வேண்டும். அப்போது தான் உன்னால் தெய்வீக ஒளியைக் காணமுடியும். பூமிக்கடியிலிருந்து தண்ணீர் பொங்குவது போல், உன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஞானப் புனல் பொங்கி வருவதை உணர்வாய்.

''அறிவுடையவர்கள் சிந்திக்கட்டும்''

என்கிறான் இறைவன்.

இன்னும் கூறுகிறான் :

''தியானத்திற்கென்று குர்ஆனை இலேசாக்கினோம் அதைச் சிந்திப்பவர் யார்?''

இதுதான் பொறுமையின் மருந்து; அதை உண்டாக்கும் வழி.

மறுபடியும் கூறுகிறேன். மனோ இச்சைக்கு இடம் கொடுத்து விடாதே; பொறுமையின் உயர்வையும் மேன்மையையும் மறந்து விடாதே.

திரு நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள் :

''மனோ இச்சைக்குக் கட்டுப்பட்டவன் அறிவிலி''.

பொறுமையைப் பற்றி ஓரளவு விவரித்துவிட்டேன். அதன் மர்மங்களையும், நுண்ணிய தத்துவங்களையும் விவரிப்பதற்கு இந்தச் சிறிய நூல் இடந்தராது. எனவே, மேலே நான் கூறியவற்றை மனத்தில் பதிய வைத்துக்

கொண்டு நேர்மையான பாதையில் நட! நல்லது எது; கெட்டது எது என்று உணர்ந்து இறைவன் தீர்ப்புக் கொப்பச் செயலாற்று! நன்மையைச் செய்வதிலும் தின்மையை விட்டு விலகுவதிலும் தான் உன் வீரத்தைக் காட்ட வேண்டும். உண்மையில் வீரன் என்பவன் தன் மனத்தை அடக்கியாள் பவனே.

நம் எல்லோருக்கும் வல்ல நாயன் மனத்தை அடக்கியாளும் ஆற்றலைத் தந்தருள்வானாக!.

ஆமீன்.